பகுதி 57-92

	பாடல் எண்
சிவ கலைகள் ...	59
ஆகமங்கள் ...	59
ருத்திரர்கள் ...	65
முகம் ஆறும் ...	65
தச நாதங்கள் ...	75
பஞ்ச வடிவு ...	75
நவலோகம் ...	90

பழநி

எண்	பாடல்	எண்	பாடல்.
57	அபகார	75	ஞானங்கொள்
58	அருத்தி	76	தகர நறு
59	அவனிதனிலே	77	தமரு மமரு
60	ஆறுமுகம்	78	தலைவலி
61	உலகபசு	79	திடமிலி
62	ஒரு பொழுது	80	திமிர வுததி
63	ஒருவரையொரு	81	பகர்தற்கரி
64	கடலை பொரி	82	பஞ்சபாதகன் பாவி
65	கதியை விலக்கு	83	பாரியான
66	கரிய பெரிய	84	புடவிக்கணி
67	கருப்புவிலி	85	போதகந்தரு
68	கருவினுருவாகி	86	மனக்கவலை
69	குரம்பை மல	87	மூலங்கிளர்
70	குருதி மல	88	மூலமந்திர
71	சிவனார் மனங்	89	வசன மிக
72	சீயுதிர மெங்	90	வரதா மணி
73	சீறலசடன்	91	வாதம்பித்த
74	சுருதிமுடி	92	வேயிசைந்

(57) சக்ரவாஹம் (8) (—) (1+1½+1½+1+3)

அபகார நிந்தைப்பட்டு உழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனை நான் நினைந்து அருள் பெறுவேனோ
இபமாமுகன் தனக்கு இளையோனே
இமவான் மடந்தை உத் தமி பாலா
ஜபமாலை தந்த சற் குருநாதா
திருவாவினன்குடிப் பெருமாளே

(58) பிலஹரி 10½ (4) (1½+6+3)

அருத்தி வாழ்வொடு தனகிய மனைவியும் உறவோரும்
அடுத்த பேர்களும் இதம் உறு மகவொடு வளநாடும்
தரித்த ஊரும் மெய்யென மனம் நினைவது நினையாது/உன்

தனைப் பராவியும் வழிபடு தொழிலது தருவாயே
எருத்தில் ஏறிய இறையவர் செவியுக உபதேசம்
இசைத்த நாவின, இதனுறு குறமகள் இருபாதம்

பரித்த சேகர, மகபதி தரவரு தெய்வயானை

பதிக்கொள் ஆறிரு புய, பழநியில் உறை பெருமாளே

உ

57

தீமைகள் செய்ததனால் நிந்தனைகளுக்கு ஆளாகி அலையாமலும்
நன்னெறியை கைக்கொள்ளாத வஞ்சகர்களுடன் சேர்வதைக் கருதாமலும்
நீ எனக்கு உபதேசித்த மந்திரப் பொருளைத் துணையாகக் கொண்டு
உன்னை நான் தியானித்து உனது திருவருளைப் பெறமாட்டேனோ!
யானையின் சிறந்த முகத்தையுடைய கணபதிக்கு தம்பியே
இமயராஜன் புதல்வியாகிய உத்தமி பார்வதியின் புதல்வனே
ஜெபமாலை எனக்குத் தந்தருளிய சற்குருநாதனே
திருஆவினன்குடிப் பெருமானே.

58.

(58) ஆசையை விருத்திபண்ணும் உலக வாழ்க்கையும், சரசஞ் செய்கின்ற மனைவியும், சுற்றத்தாரும்
சிநேகிதர்களும், இன்பம் தரும் குழந்தையும், வளப்பமுள்ள நாடும்
இருப்பிடமாகக் கொண்ட ஊரும், ஆகிய இவையெல்லாம் மெய்யென்று
(எப்பொழுதும் நிலைத்தவை) என்னும் எண்ணத்தை எண்ணுமல், உன்னைப்
போற்றி வழிபடும் பணியைத் தந்தருளுவாயே!
இடப வாகனத்தில் ஏறும் (சிவபிரானது) செவியில் புகுமாறு உபதேசப்பொருளை
மொழிந்தருளிய திருநாவை உடையவனே! காவற் பரண்மிசை
இருந்த குறமகள் வள்ளிபிராட்டியின் இரண்டு பாதங்களையும்
தாங்கும் திருமுடியை உடையவனே! வேள்விக்கு அதிபதியாகிய
தேவேந்திரன் செய்த தவத்தினால் மகளாக வந்த தேவசேனையம்மையார்
பதியாகக் கொண்ட பன்னிரு புயாசலத்தை உடையவனே! பழநியம்பதி
யில் வாழ்கின்ற பெருமானே

பௌளி (5½) (–) (1+½+½+½)

அவனிதனிலே பிறந்து மதலையெனவே தவழ்ந்து
அழகு பெறவே நடந்து இளைஞோனாய்
அருமழலையே மிகுந்து குதலை மொழியே புகன்று
அதிவிதமாய் வளர்ந்து பதினாறாய்
சிவகலைகள்[2] ஆகமங்கள் மிகவும் மறை ஓதும் அன்பர்
திருவடிகளே நினைந்து துதியாமல்
தெரிவையர்கள் ஆசை மிஞ்சி வெகு கவலையாய் உழன்று
திரியும் அடியேனை உன்றன் அடிசேராய்
மவுன உபதேச சம்பு மதி அறுகு வேணி தும்பை
மணிமுடியின் மீது அணிந்த மகதேவர்

மனமகிழவே அணைந்து ஒரு புறமதாக வந்த
மலைமகள் குமார, துங்க வடிவேலா

பவனி வரவே உகந்து மயிலின் மிசையே திகழ்ந்து
படி அதிரவே நடந்த கழல் வீரா
பரம பதமே செறிந்த முருகன் எனவே உகந்து
பழநிமலை மேல் அமர்ந்த பெருமாளே

---

(2) சிவகலைகள் : 14 நூல்கள். திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபாவிருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக் கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம்

பூமியிலே பிறந்து, குழந்தையாகத் தவழ்ந்து, அழகு பெறும்
வகையில் நடை பழகி, இளைஞனாய்
அரிய மழலைச் சொல்லே மிகுந்து வர, மழலை மொழிகளையே பேசி
அதிக விதமாக வயதிற்கேற்ப வளர்ந்து வயதும் பதினாறு ஆகி
சைவநூல்கள், ஆகமங்கள், மிக்க வேதங்கள் இவைகளை ஓதுகின்ற
அன்பர்களுடைய திருவடிகளையே நினைந்து போற்றாமல்
மாதர்கள் மீது ஆசை மிகுந்து. அதனால் மிக்க கவலையுடன் அலைந்து
திரிகின்ற அடியேனை உனது திருவடிகளிற் சேர்த்து அருளுவீராக
மௌனமாகவேயிருந்து, சனகாதி முனிவர்கட்கு உபதேசித்தருளிய சிவ
பெருமான், சந்திரன், அறுகம் புல், (கங்கை) நீர், தும்பை மலர் இவைகளை
அழகிய முடியின் மேல் அணிந்துள்ள மகாதேவர்
மனம் மகிழும்படியாக அவரை அணைந்து, அவரது உரு புறத்தில் இடங்
கொண்டுள்ள மலைமகளாம் பார்வதியின் குமாரனே! பரிசுத்தமான
கூர் வேலனே!
திருவுலா வர விரும்பி, மயிலின் மேல் ஏறி விளங்கி, உலகு அதிர
வலம் வந்த கழல் வீரனே!
மோக்ஷ வீட்டிற் பொருந்தி விளங்கும் முருகன் என அமர்ந்து
மகிழ்ச்சியுடன் பழநி மலை மேல் அமர்ந்த பெருமானே.

ஆகமம்: ௨௮: (மலத்தைக் கெடுத்து மோக்ஷத்தை அருளுவது) காமிகம்
யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், சூக்ஷ்மம், சகஸ்ரம், அம்சுமான்
சுப்ரபேதம், விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்நேயம், வீரம், ரௌரவம்
மகுடம், விமலம், சந்திர ஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லலிதம், சித்தம்,
சந்தானம், சர்வோத்தம், பாரமேச்சுரம், கிரணம், வாதுளம்.

50) மோகனம்/நாட்ட குறிஞ்சி (2½) · ம (1+1½)

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்று பூதி
ஆகம் அணி மாதவர்கள் பாதமலர் சூடும்
அடியார்கள் பதமே துணை அது என்று நாளும்
ஏறு மயில் வாகன குகா சரவண எனது
ஈச என மானம் உன தென்று மோதும்

ஏழைகள் வியாகுலம் இது ஏது என வினவில். உனை
ஏவர் புகழ்வார் மறையும் என் சொலாதோ

நீறு படு மாழை பொரு மேனியவ வேல, அணி
நீல மயில் வாக, உமை தந்த வேளே
நீசர்கள் தம்மோடு எனது தீவினையெலாம் மடிய
நீடு தனி வேல் விடு மடங்கல் வேலா

சீறிவரு மாறு அவுணன் ஆவி உணும் ஆனிமுக
தேவர் துணை வா, சிகரி அண்ட கூடம்
சேரும் அழகார் பழநி வாழ் குமரனே, பிரம
தேவர் வரதா முருக தம்பிரானே

ஆறுமுகம், ஆறுமுகம். ஆறுமுகம், ஆறுமுகம், ஆறுமுகம், ஆறுமுகம்
என்று ஆறுமுறை கூறித் திருநீற்றை
உடம்பில் அணியும் பெரிய தவசிகளுடைய பாதமலரை தலையில்
சூடுகின்ற அடியார்களின் திருவடியே துணையாம் என்று கடைப்
பிடித்து நாள் தோறும்

ஏறுதற் கமைந்த மயில் வாகனனே! குகனே! சரவணனே! எனது ஈசனே!
அடியேனுடைய மானம் (உற்ற பெருமை) உம்முடையதே என்று சொல்லி
மோதிக் கொள்ளுகின்ற [ஓதும்: ஓதிப் புகழ்கின்ற]

(ஏழைகள்) அடியார்களைக் கண்டு "உமக்கு இது என்ன கவலை" என்று கேட்டு
அருளாவில்லையானால், உம்மை அருட்கடல் என்றும், சர்வக்ஞர் என்றும்
யார் தான் புகழ்வார்கள்? வேதம் தான் உன்னை என்ன சொல்லாது?
வேதம் தான் உன்னைப் புகழுமா?

திருநீறு விளங்கும் பொன் போன்ற மேனியை உடையவனே! வேலனே!
அழகிய நீல மயில் வாகனனே! உமை தந்த வேளே!

அசுரர்கள் தம்மோடு எனது தீவினை யாவும் மடிந்தொழிய, நீண்ட
ஒப்பற்ற வேலாயுதத்தைச் செலுத்திய (மடங்கல்) வடவைத் தீ அனைய
வேலாயுதத்தை உடையவனே!

சீறிக் கோபித்து வந்த, பகைவனான கஜமுகாசுரன் என்னும் அவுணனு
டைய உயிரைப் போக்கிய, யானை முகத்தையுடைய விநாயகப்
பெருமானுக்கு சகோதரனே! மலை உச்சி ஆகாய முகட்டை
எட்டும் அழகு நிறைந்த பழநியில் வாழும் குமரனே! பிரமதேவருக்கு
வரம் அருளிய மூர்த்தியே! முருகனே! தம்பிரானே!

61) <u>சௌராஷ்டிரம்</u> (8½) (ட) (1+½+1½+1½+3)

உலக பசு பாச தொந்தம் அதுவான
உறவு கிளை தாயர் தந்தை மனை பாலர்
மல ஜல சுவாச சஞ்சலமதாலே. என்
<u>மதி நிலை கெடாமல் உன்றன்</u> <u>அருள் தாராய்</u>
சலம் அறுகு பூளை தும்பை அணி சேயே

சரவணபவா முகுந்தன் மருகோனே
பலகலை சிவாகமங்கள் பயில்வோனே
<u>பழநிமலை வாழ வந்த</u> பெருமாளே

---

62) <u>பேகடா</u> 62 (11) (ட) (1+½+1+1½+½+1½+3)

ஒரு பொழுதும் இரு சரண நேசத்தே வைத்து உணரேனே
உனது பழநிமலை எனும் ஊரைச் சேவித்து அறியேனே
பெரு புவியில் உயர்வு அரிய வாழ்வை தீரக் குறியேனே

<u>பிறவி</u> அற நினைகுவன் என் ஆசைப் பாடைத் தவிரேனே

துரிதம் இடு நிருதர் புர சூறைக்காரப் பெருமாளே

தொழுது வழிபடும் அடியர் காவற்காரப் பெருமாளே

விருதுகவி விதரண விநோதக்காரப் பெருமாளே
விறல் மறவர் சிறுமி திரு வேளைக்காரப் பெருமாளே

(61)

உலகத்தில் உயிர், பாசம், சம்பந்தப்பட்டதான
உறவினராம் சுற்றத்தார், தாய், தந்தை, மனைவி, மக்கள்
மலம், ஜலம், மூச்சு உபாதைகளால் உண்டாகும் துன்பங்களால், எனது
புத்தி நிலை கெடாதவாறு உனது திருவருளைத் தந்தருளுவாயே!
கங்கைநீர், அறுகம்புல், பூளை மலர், தும்பை மலர் இவைகளை அணியும்
சிவபெருமானின் குமாரனே!
சரவணபவனே! திருமால் மருகனே
பல கலைகளாலும், சிவாகமங்களாலும் போற்றப்படுபவரே!
பழநிமலையில் வாழ வந்து (வீற்றிருக்கும்) பெருமானே

62

(62) ஒருவேளை கூட உனது இரண்டு சரணாரவிந்தங்களில் அன்பைச்
செலுத்தி மெய்யுணர்வைப் பெற்றேனில்லை
உனது பழநிமலை என்னும் க்ஷேத்திரத்தை வணங்கி அறியேன்;
பெரிய இப்பூமியில் உயர்ந்த அரியதாகிய வாழ்வை ஒழிக்குமாறு
குறித்தேனில்லை.
(இத்தகைய நான்) பிறவி ஒழிய வேண்டுமென நினைக்கின்றேன்;
(அந்த நினைப்புள்ள நான்) என் ஆசைகளை விட்டொழிக்க மாட்டேனே
பாவத்தொழில்களைச் செய்த அசுரர்களுடைய ஊரை, சுழற்காற்றை
போல வீசி அழித்த பெருமானே
தொழுது வழிபடுகின்ற அடியார்களுக்கு காவற்காரனாயிருந்து
உதவும் பெருமானே
வெற்றிக் கவிகளை (உலகுக்கு) உதவிய அற்புதமூர்த்தியாகிய சம்பந்தப் பெருமானே
தீரம் வாய்ந்த குறவர் சிறுமியாம் வள்ளிக்கு காவலாயிருந்து
[illegible] பெருமானே

(63) ஹிந்தோளம் (5) 63 (ரூ) (2+½+½)

ஒருவரை ஒருவர் தேறி அறிகிலர் மதவிசாரர்
ஒரு குண வழி உறாத பொறியாளர்
உடலது சதமெனநாடி கனவு பொய் கொலைகள் ஆடி
உற, நமன் நரகில் வீழ்வர் அது போய் பின்

வரும் ஒரு வடிவம் மேவி இருவினை கடனுள் ஆடி
மறைவர் இன் அனைய கோலம் அதுவாக

மருவிய பரம ஞான சிவகதி பெறுக, நீறு
வடிவுற அருளி பாதம் அருள்வாயே

திரிபுரம் எரிய, வேழ சிலை மதன் எரிய, மூரல்
திரு விழி அருள் மெய்ஞ் ஞான குருநாதன்

திரு, சரஸ்வதி, மகேசுவரி இவர் தலைவர் ஓத
திருநடம் அருளும் நாதன் அருள்பாலா

சுரர்பதி அயனும் மாலும் முறையிட அசுரர் கோடி
துகள் எழ விடு மெய்ஞ் ஞான அயிலோனே
சுககுற மகள் மணாளன் என மறை பலவும் ஓதி
தொழ முது பழநி மேவு பெருமானே.

(63) ஒருவர் (சொல்வதை) மற்றொருவர் இன்னதென்று தேர்ந்து
அறிய மாட்டாதவர்களாகிய மத விசாரர்களும், ஒரு கொள்கை வழி
யில் நிலைத்து நிற்காத மனத்தினை உடையோர்களுமான (மக்கள்)
இவ்வுடல் என்றும் நிலைத்து நிற்குமென எண்ணி, களவும் பொய்யும்,
கொலைகளும் செய்து கொண்டே வந்து (ஈற்றில்) இயமனுடைய
நரகத்தில் வீழ்வர்; அந்த நிலை போன பின்னர்
ஏற்படும் ஒரு உருவத்தை அடைந்து, நல்வினை தீவினை என்னும்
இரு வினைகளாம் கடலில் உழன்று மறைந்து போவர்! இத்தகை
யோரது வாழ்வு இப்படியாக (அடியேன் அங்ஙனம் எல்லாம் அலையாமல்)
திருவருள் பொருந்திய பரம ஞான மயமான சிவகதியைப் பெற, (வடிவுறு)
ஞான வடிவை யுடைய (நீறு) திருநீற்றை அருளி (உனது)
திருவடியைத் தந்தருளுவாயாக.

திரிபுரம் எரிந்து விழவும், கரும்பு வில்லைக் கொண்ட மன்மதன்
எரிந்து விழவும், (முரல்) புன்சிரிப்பாலும், திருக்கண்களாலும் அருள்
புரிந்த, உண்மை அறிவை உணர்த்தும் குருநாதனும்
இலக்குமி, சரஸ்வதி, மகேச்வரி ஆகிய இவர்களது தலைவர்களாகிய
திருமால், பிரம்மா, ருத்திரன் என்ற மும்மூர்த்திகளும் துதி செய்ய, திரு
நடனம் புரியும் நாதனும் ஆன சிவபிரான் அருளிய குழந்தையே!
தேவேந்திரனும், பிரம்மாவும், திருமாலும் ஓலமிட, அசுர கோடிகள்
தூளாகுமாறு செலுத்திய மெய்ஞ்ஞான வேலாயுதனே.
இன்பத்தை நல்கும் குறமகள் வள்ளியின் மணாளன் என்று வேதாங்கங்கள்
பலவும் போற்றி செய்து வணங்க, பழமை வாய்ந்த பழநியில் வீற்றிருக்கும்
பெருமாளே.

தந்யாஸி (௯). ஆதி

கடலை,பொரி,அவரை, பல கனி, கழைநுகர்
கடின குட உதர — விபரீத
கரட தடமும் மத நளின சிறு நயன
கரிணி முகவரது — துணைவோனே

வடவரையின் முகடு அதிர ஒரு நொடியில்
வலம் வரு மரகத — மயில் வீரா
மகபதி தரு சுதை குறமகளொடு இருவரும்
மருவு சரசவித — மணவாளா

அடல் அசுரர்கள் குலம் முழுதும் மடிய உயர்
அமரர் சிறையை விட — எழில் மீறும்
அருண கிரண ஒளி ஒளிரும் அயிலை விடும்
அரகர சரவண பவ — லோலா

படல உடுபதியை இதழி அணி சடில
பசுபதி, வரநதி, — அழகான

பழ நிமலை அருள் செய் மழலை மொழி மதலை
பழநி மலையில் வரு — பெருமாளே

(64)

கடலை, பொரி, அவரை, பலவகை பழங்கள், கரும்பு இவைகளை உண்ணும்
கடின குடம் போன்ற வயிற்றையும், அதிசயமான
மதம் பாய் சுவடுள்ள இடங்கொண்ட, மும்மதத்தையும், தாமரை
மிதழ் போன்ற சிறிய கண்களையும், யானைமுகமும் கொண்ட கணபதி
யின் சகோதரனே!

வடமலையாகிய மேருவின் சிகரங்கள் அதிரும்படி ஒரு நொடிப் பொழுதில்
(உலகை) வலம் வந்த மரகத (பச்சை) மயில் வீரனே!

வேள்விகட்கு தலைவனை இந்திரன் தந்த மகளாம் தேவசேனை, குறமின்
னாம் வள்ளி என்னும் இரு தேவிமார்களும் தழுவி இன்ப ஆடல்
புரிகின்ற மணவாளனே!

வலிமை மிகுந்த அசுரர்களுடைய குலம் முழுதும் மடியவும்,
சிறந்த தேவர்களுடைய சிறை நீங்கவும், அழகு மிகுந்த
சிறந்த கதிரொளி வீசும் வேலாயுதத்தைச் செலுத்திய பாவத்தை
அழிப்பவரே! சரவணபவனே! திருவிளையாடல்கள் புரிபவரே!

கூட்டமான நக்ஷத்திரங்களுக்குத் தலைவனை சந்திரனையும்,
கொன்றை மலரையும் அணிந்த (சடில) சடைமுடியையுடைய
சிவபெருமானும், (வரநதி) கங்கா நதியும், அழகான
பழைய நிர்மலியாம் பார்வதி தேவியும், அளித்தருளிய
மதலை மொழியை உடைய குழந்தையே! பழநி மலையில்
எழுந்தருளியிருக்கும் பெருமானே!

கதியை விலக்கு மாதர்கள் புதிய இரத்ன பூஷண
கனதன வெற்பு மேல் மிகு — மயலான
கவலை மனத்தன் ஆகிலும் உனது ப்ரசித்தமாகிய
கனதனம் ஒத்த மேனியும் — முகம்* ஆறும்
அதிபல வஜ்ர வாகுவும் அயில் நுனை வெற்றி வேலதும்
அரவு பிடித்த தோகையும் — உலகு ஏழும்

அதிர அரற்று கோழியும் அடியர் வழுத்தி வாழ்(வு) உறும்
அபிநவ பத்ம பாதமும் — மறவேனே

இரவி குலத்து, இராஜத மருவி, எதிர்த்து, வீழ், கடு
ரணமுக சுத்த வீரிய — குணமான

இளையவனுக்கு நீள் முடி அரசது பெற்று வாழ்வுற
இதமொடு அளித்த ராகவன் — மருகோனே.
பதினொரு* ருத்திராதிகள் தபனம் விளக்கு மாளிகை
பரிவொடு நிற்கும் ஈசுர — சுரலோக
பரிமள கற்பக அடவி அரி அளி சுற்று பூ உதிர்
பழநிமலைக்குள் மேவிய — பெருமாளே

---

* பதினொருருத்திரர்கள் : மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விஜயன், வீமதேவன், பவோத்பவன், காபாலி, சௌமியன்.

(65) நல்வகதியை அடையமுடியாதபடி தடுக்கின்ற பொது மகளிரின்
புதிய ரத்னாபரணங்கள் அணிந்துள்ள கனத்த கொங்கை மலைமேல்
மிகுதியாக வைத்த மயக்க அறிவால் உண்டான

கவலை கொண்ட மனத்தை உடையவனாயிருந்த போதிலும், உனது புகழ்
பெற்ற பொன் போன்ற திருமேனியையும், முகங்கள் ஆறினையும்

வலிமை நிறைந்த வைரமணி போன்ற தோள்களையும், கூரிய நுனை
யையுடைய வெற்றி வேலையும், பாம்பைப் பிடித்துள்ள கலாப மயிலையும்
ஏழு உலகங்களும்

அதிரும்படி கூவுகின்ற சேவலையும், அடியார்கள் துதிசெய்து நல்
வாழ்வைப் பெறும், (என்றும்) புதிய தாமரை மலரையன்ன
திருவடியையும் ஒரு போதும் மறக்க மாட்டேன்.

சூரிய சம்பந்தமுள்ளவனாய், ரஜோகுணம் கொண்டவனாய், (வாலியை)
எதிர்த்து (வீழ்) தோல்வியுற்ற, (கரு) கொடிய போர்க்களத்தில் சுத்த
வீரம் வாய்ந்த குணம் படைத்தவனை

தம்பியாகிய சுக்கிரீவனுக்குப் பெரிய அரசாட்சியைப் பெற்று
வாழுமாறு அன்புடன் உதவி செய்த இராமபிரானுடைய மருமகனே

பதினொரு உருத்ராதிகளினுடைய தனி திகழும் திருக்கோயிலில்
அன்புடன் எழுந்தருளியிருக்கும் ஈசுரனே! தேவலோகத்தில் உள்ள

நறுமணம் வீசும் கற்பகக் காட்டில், வரி பொருந்திய வண்டுகள்
சூழ்ந்து மொய்ப்பதனால் மலர்கள் உதிர்கின்ற பழநி மலையில்
வீற்றிருக்கும் பெருமானே

முகம் ஆறும்: ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், [illegible]
இவைகளுடன் அதோ முகமும் சேர்ந்து ஆறுமுகங்களாயின.

(66) மோகனம் (12) ஆதி-திஸ்ர நடை

கரிய பெரிய எருமை கடவு
கடிய கொடிய திரிசூலன்
கருவி இறுகு கயிறொடு உயிர்கள்
கழிய முடுகி எழு காலம்
திரியு நரியும் எரியும் உரிமை
தெரிய விரவி அணுகாதே
செறிவும் அறிவும் உறவும் அனைய
திகழும் அடிகள் தரவேணும்
பரிய வரையின் அரிவை மருவு
பரமர் அருளும் முருகோனே
பழனம் உழவர் கொழுவில் எழுது
பழைய பழநி அமர்வோனே
அரியும் அயனும் வெருவ, உருவ
அரிய கிரியை எறிவோனே
அயிலும் மயிலும் அறமும் நிறமும்
அழகும் உடைய பெருமானே

---

(67) ஸிந்துபைரவி (25½) (4) 15 [illegible] 15 திஸ்ர நடை

கருப்பு விலில் மருப் பகழி தொடுத்து மதன் விடுத்து அனைய
கடைக் கணொடு சிரித்து அணுகு
கருத்தினை விரகு செய் மடமாதர்

(66)

கறுத்த பெரிய எருமையைச் செலுத்தும், கருமையும், கொடுமையுங் கொண்ட முத்தலைச் சூலம் ஏந்திய யமன்,

கோபித்து, நெருக்கி அழுத்தும் பாசக் கயிறு கொண்டு, உயிர் நீங்கும்படியாக வேகமாக எழுந்து வரும் போது

திரிகின்ற நரியும் நெருப்பும் தமக்குள்ள உரிமையைக் காட்டி நெருங்கி வராதபடி.

என் நிறைவும், அறிவும், உறவும் போன்ற உமது அழகிய திருவடிகளைத் தந்தருள வேண்டும்

பருத்த மலையாம் இமகிரியின் புதல்வியாகிய பார்வதியை மணந்த சிவபெருமான் அருளிய குழந்தையே

வயலில் உழவர்கள் ஏர்க்கால் கொண்டு அழுந்திப் பதிய உழுகின்ற பழமையான பழநிப் பதியில் வீற்றிருப்பவரே!

திருமாலும், பிரமனும் அஞ்சி நிற்க; உன்குருவிச் செல்லும்படி, மாயை வல்ல கிரவுஞ்ச மலை மீது (வேலாயுதத்தைச்) செலுத்தியவரே!

வேலும், மயிலும், தருமமும் ஒளியும் அழகும் கொண்ட பெருமானே.

---

(67) கரும்பு வில்லில் மணம் வீசும் அம்புகளைத் தொடுத்து, மன்மதன் செலுத்தினது போலக் கடைக்கண் நோக்குடன் சிரித்து, நெருங்கிக் கருத்துடன் உபாயச் செயல்கள் செய்கின்ற மடமையுடைய விலை மாதர்களின்

கதக்களிறு திடுக்கடுற மதர்த்து மிக எதிர்த்து மலை
கனத்த இரு தனத்தின் மிசை
கலக்கு மோகனம் அதில மருளாதே

நடுப்படுதல் இருப்பு (உ)டைமை மனத்தில் வர நினைத்து அருளி
உனைப்புகழும் எனைப் புவியில்
நடுத்தனும் வகை திரு அருளாலே

உருத்திரனும் விருத்தி பெற அநுக்கிரகி எனக் குறுகி
உரைக்கும் அ மறை அடுத்த பொருள்
உணர்த்தும் நான் அடிமையும் உடையேனே

படுப்பதும் உருப்பெரிய அரக்கர்களும் உரைக்கும் எழு
படிக் கடலும் அலைக்க வல
பருத்த தோகையில் வரும் முருகோனே

பதித்த மரகதத்தினுடன் இரத்ன மணி நிரைத்த பல
பணிப் பனிரு புயச் சயில
பராக்கவே இயல் தெரி வயலூரா

திருப்புகழை உரைப்பவர்கள் படிப்பவர்கள் மிடிப்பகைமை
செயித்தருளும் இசைப்பிரிய
திருத்த மாதவர் புகழ் குருநாதா

சிலைக் குறவர் இலைக்குடிலில் புனைக் களக முகிற் புடை செல்
திருப்பழநி மலைக்குள் உறை
திருக்கை வேல் அழகிய பெருமானே

கோபமுள்ள யானையும் திடுக்கிடும்படி செழித்து, மிகவும் திரண்டு மலைபோலக் கனத்துள்ள இரண்டு தனங்களின் மீது கலக்கம் கொள்ளும் மோக வெறியில் மயக்கம் கொள்ளாமல்

நன்மையடைதலில் விருப்ப உணர்ச்சி என் மனதில் உண்டாகும்படி

(உனது) திருவுள்ளத்தில் நினைத்து அருள் செய்து, உன்னைப் புகழ்ந்து பாடும் என்னை, இப்பூமியில் நிகரில்லாத வகையும் படியான வகையை உனது திருவருளினாலே,

ருத்ரமூர்த்தியும் விளக்கம் பெற வேண்டி எனக்கு உபதேசித்தருளுக என்று உன்னை அணுகிக் கேட்க, அவருக்கு நீ உரைத்த அந்த இரகசியப் பொருளை அடியேனுக்கும் உணர்த்தி உபதேசிக்கின்ற ஒரு நாளில், அடியேன் பெறக் கடவேனோ (எனக்குக் கிட்டுமா?)

மலையையும், பெரிய வடிவமுடைய அரக்கர்களையும், நலிக்கின்ற ஏழு பூமியையும், ஏழு கடல்களையும் அலைத்துக் கலக்க வல்ல பெரிய தோகை மயிலின் மீது வருகின்ற முருகோனே!

பதிக்கப் பெற்ற மரகதத்துடன் ரத்ன மணிகள் வரிசையில் அமைக்கப் பெற்ற பல ஆபரணங்களை அணிந்துள்ள பன்னிரு புய மலைகளை உடையவனே! விரிவாக இயற்றமிழைத் தெரிந்த வயலூர் முருகனே!

திருப்புகழை உரைப்பவர்கள், படிப்பவர்களுடைய வறுமையையும், பகையையும் தொலைத்து வெற்றி தந்தருளும் இசைப்பிரியனே! திருந்திய ஒழுக்கமுடைய சிறந்த தவத்தினர் புகழ்கின்ற குருநாதனே

வில்லை ஏந்திய குறவர்களுடைய ஒலைக் குடிசையிலும், புகைகளின் கருமை போற கரிய மேகங்கள் பக்கங்களில் தவழ்ந்து செல்லும் திருப்பழநி மலையிலும் வீற்றிருக்கும், திருக்கையில் வேல் ஏந்தும் அழகிய பெருமானே

68) விஜய நாகரி (5½) ஏ (1+½+1½+1½) 19

கருவின் உருவாகி வந்து வயது அளவிலே வளர்ந்து
கலைகள் பலவே தெரிந்து — மதனாலே
கரிய குழல் மாதர் தங்கள் அடி சுவடு மார் புதைந்து
கவலை பெரிதாகி நொந்து — மிகவாடி
அரகர சிவாய என்று தினமும் நினையாமல் நின்று
அறுசமய நீதி நன்றும் — அறியாமல்

அசனம் இடுவார்கள் தங்கள் மனைகள் தலை வாசல் நின்று
அநுதினமும் நாணமின்றி — அழிவேனோ
உரகபட மேல் வளர்ந்த பெரிய பெருமாள் அரங்கர்
உலகு அளவு மால் மகிழ்ந்த — மருகோனே

உபய குல தீப துங்க, விருது கவி ராஜ சிங்க,
உறை புகலியூரில் அன்று — வருவோனே

பரவை மனை மீதில் அன்று ஒரு பொழுது தூது சென்ற
பரமன் அருளால் வளர்ந்த — குமரேசா
பகை அசுரர் சேனை கொன்று அமரர் சிறை மீள வென்று
பழநி மலை மீதில் நின்ற — பெருமானே

(68) கருவில் உருவாகி வந்து தோன்றி, வயதுக்கு ஏற்றபடி வளர்ந்து.
கலைகள் பலவும் அறிந்து, மன்மத சேட்டையால்

கறுத்த கூந்தலையுடைய பெண்களின் அடிச்சுவடு மார்பில் புதைய அழுந்தி விழு
கவலைகள் அதிகமாகி நொந்து மிகவும் வாடி
'ஹரஹர சிவாய' என்று திருநாமங்களைச் சொல்லி, நாள்தோறும் நெஞ்சில்
அன்புடன் நினையாமல், (மரம் போல்) நின்று, அறு சமயங்களின் நீதியில
ஒன்றையேனும் அறிந்து கொள்ளாமல்
உணவு தருவோரது மனைகளின் முன் வாயிலில் நின்று நாள்தோறும்
வெட்கமின்றி அழிந்து போவேனோ!
பாம்பின் படத்தின் மேல் (கண் வளரும்) துயிலும் பெருமை வாய்ந்த பெருமாள்
ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியுள்ளவர், உலகை ஈரடியால் அளந்த வருமாகிய
திருமால் மகிழும் மருகனே!
(தாய், தந்தை எனும்) இரண்டு குலத்து வழியிலும் விளக்கமுற்ற
பரிசுத்தனே! வெற்றிக் கவிராஜ சிங்கமே! உறைவிடமாகச் சீகாழி
யில் அன்று (சம்பந்தராக) வந்து தோன்றியவனே!
பரவை நாச்சியார் திருமணத்துக்கு அன்றொரு நாள் தூது நடந்த சிவபெருமான்
திருவருளால் வளர்ந்த குமரேசனே!
(தேவர்களிடத்துப்) பகை கொண்ட அசுரர்களுடைய சேனைகளை அழித்து
தேவர்கள் சிறையினின்றும் மீளும்படி வென்று, பழநி மலை மீதில்
வந்து நின்ற பெருமானே.

குரம்பை மல சலம் வழு வழு நிணமொடு
எலும்பு, அணி சரி தசை, இரல்குடல், நெதி
குழைந்த செயிர் மயிர், உதிரமொடு இவை பல கசுமாலம்
குடின் புகுதும் அவர் அவர் கடு கொடுமையர்,
இடும்பர், ஒரு வழி இணையிலர், கசடர்கள்
குரங்கர், அறிவிலர், நெறியிலர், மிருகனை விறலான

சரம்பர், உறவனை, நரகனை, துரகனை,
இரங்கு கலியனை, பரிவுறு சடலனை,
சவுந்தரிக முக சரவண பதமொடு மயிலேறித்

தழைந்த சிவசுடர் தனை, என மனதினில்
அழுந்த உரை செய வருமுக நகை தனி
தழைந்த நயனமும் இரு மலர் சரணமும் மறவேனே (மு)

இரும்பை வருமொடு இயைய பலமுகில் பொழில்
உறைந்த குயில் அளி நவி பரவிட, மயில்
இசைந்து நடம் இடும் இணை இலி புவி நகர் வளநாடா

(Contd on page 29)

(69) கூடாகிய உடலில், மலம், சலம், அழுவழுப்பாயுள்ள கொழுப்புடன்,
எலும்பு, அடுக்காகச் சரிந்துள்ள தசை, ஈரல், குடல், நியதியில்லா
மல் சிக்குற்ற சேற்றமுடைய மயிர், ரத்தம் இவைகளோடு
கெட்ட அழுக்குகள் (நிறைந்ததுமான)

(இந்தக் கசுமால வீட்டில்) குடிபுகுந்து வாழ்பவர்களோ எனில்,
அவர்கள் பொல்லாத கொடுமையாளர்கள்; அகந்தை கொண்டவர்கள்
ஒரு வழியிலும் ஒத்து நடவாதவர்கள், கீழ்மக்கள், குரங்கு போலச் சேட்டை
செய்பவர்கள், அறிவில்லாதவர்கள், ஒழுக்கம் இல்லாதவர்கள், மிகத்
துக்கு ஒத்த வலிமை வாய்ந்த

விழுகுணமுடையவர்கள் (இத்தகையவர்களோடு) உறவின் உறவு
கொண்டவனும், நரகத்துக்கு வாய்த்தவனும், (மனம் போனவழி) குதிரை
போல ஓடுபவனும், பரிதவிக்கும் சிறுமையையுடையவனும், உடலின்மேல்
மிக்க அன்பு கொண்டவனும் (ஆகிய என் பொருட்டு), பேரழகுடைய
திருமுகங்களும், தாமரையனைய திருவடிகளும் தோன்ற மயிலில் ஏறி
செழிப்புடன் புரிந்த சிவஒளியை எனது மனத்தினில் அழுந்தும்படி
யாக உபதேசிக்க வந்த திருமுகத்தில் அரும்பிய புன்னகையின் பேரொ
ளியையும், குளிர்ந்து நோக்கிய திருக்கண்களையும், இரண்டு மலர்ச்
சரணாரவிந்தங்களையும் (நான்) ஒரு போதும் மறக்க மாட்டேன்

இலுப்பை மரங்களும், மகிழ மரங்களும் பொருந்தியுள்ள மேகங்களை
தவழுமாறு உயர்ந்துள்ள அநேக சோலைகளில் உறைகின்ற குயில்களும்
வண்டுகளும் இனிமையான ஒலிகளைச் செய்ய, மயில்கள் அதற்குத்
தக்கவாறு நடனம் செய்கின்ற இணையில்லாத சிதம்பர க்ஷேத்திரத்தை
தன்னகத்தே கொண்டுள்ள, வளப்பம் பொருந்திய நாட்டுக்கு
உரியவனே.

(contd on page 30)

1) கேதார கௌளை (3½) ப (1½+2)

குருதி மல சலம் ஒழுகு நரகுடல்
அரிய புழு அது நெளியும் உடல் மத
குருபி நிணசதை விளையும் உளை சளி உடலூடே
குடிகள் என பல குடிகை வலி கொடு
குமர வலி தலை வயிறு வலி என
கொடுமை என பிணி கலகம் இடும் இதை அடல் பேணி

மருவி, மதனன் உள் உருகி, புளகித
மணி அசல பல கவடி மலர் புனை
மதன கலை கொடு குவடு மலை தனில் மயல் ஆகா

மனது துயர் அற வினைகள் சிதறிட
மதன பிணியொடு கலைகள் சிதறிட
மனது பதம் உற எனது தலை, பதம் அருள்வாயே (மு)

நிருதர் பொடிபட அமரர் பதி பெற
நிசித அர வளை முடிகள் சிதறிட
நெறிய கிரி கடல் எரிய உருவிய கதிர்வேலா

நிறைய மலர் பொழி அமரர் முநிவரும்
நிருப குருபர குமர சரண் என
நெடிய முகில் உடல் கிழிய வரு, பரி மயிலோனே

(10) ரத்தம், மலம், சலம் இவை ஒழுகின்ற மனிதக் குடலையும், சிறிய புழுக்கள் நெளிகின்ற உடலையும் கொண்டு, மதம் கொண்ட விகார ரூபங் கொண்டவனாய், கொழுப்பு, சதை ஊறி எழும் சேறு போன்ற சளி) இவையெல்லாம் உடலினுள்ளே

குடியிருப்பவர்கள் போலப் பலவும் (குடிசை) குடி கொண்டு; (வலிகமாய்) வலிமையான கண்ட வலி, தலைவலி, வயிற்று வலி எனப் பெயர் பூண்டு, கொடுமை என்னும்படி நோய்களெல்லாம் வேதனை செய்யும் இவ்வுடலைப் பலமாக விரும்பியவனாய் உள்ள நான்

மாதர்களுடன் கலந்து, காமமுடைய உள்ளமும் (பொறுமையால்) கரிந்து போகப், புளகாங்கிதமும், மணிகளும் பூண்ட மலை போன்றதும் பலகறை போன்ற நகைகளும், மலரும் புனைந்து, காமசாத்திரத் திற கூறியபடி, திரண்ட மலை போன்ற தனங்களில் மயக்கம் கொள்ளாமல்,

மனதின் துயர் ஒழிய, வினைகள் சிதறுண்டு போக, காம நோயும், (குற்ற) காம கலைகளும் (என்னை விட்டு) விலக, (என்) மனம் பக்குவ (சாந்த) நிலையை அடைய, என்னுடைய தலையில், (உன்னுடைய) திருவடியைச் சூட்டி அருளுவாயாக.

அசுரர்கள் பொடிபடும்படியும், தேவர்கள் (தங்கள்) ஊரைப் பெறும்படியும் கூரிய நாகாஸ்திரம், சக்ராயுதம் என்ற கணைகளின் உச்சிகள் சிதறவும், (கிரௌஞ்ச) மலைகள் பொடிபடவும், கடல்கள் எரியுண்ணவும் செலுத்திய ஒளிமிகுந்த வேலாயுதரே!

நிரம்ப மலர்களைப் பொழிந்து தேவர்களும் முநிவர்களும், அரசே! குருபரனே குமரனே! சரணம் எனப் பணிய, பெரிய மேக படலம் கிழிபட்டு (பிரிந்து) தோன்றக் களித்தெழும் வாகனமாம் மயிலை உடையவனே!

பருதி மதி கனல் விழிய சிவனிடம்
மருவும் ஒரு மலை அரையர் திருமகள்,
பழவம் முகில் என அரியின் இளையவள் — அருள் பாலா

பரம கணபதி அயலின் மதகரி
வடிவு கொடுவர விரவு குறமகள்
அபயம் என அணை பழநி மருவிய — பெருமாளே (6)

ஜோன்புரி/சங்கராபரணம் (2½) 7| ⊖ (1+½)

சிவனார் மனம் குளிர உபதேச மந்த்ரம் இரு
செவி மீதிலும் பகர் செய் — குருநாதா

சிவகாம சுந்தரி தன் வர பால கந்தா நின்
செயலே விரும்பி உளம் — நினையாமல்

அவமாயை கொண்டு உலகில் விருதா அலைந்து உழலும்
அடியேனை அஞ்சல் என — வரவேணும்
அறிவு ஆகமும் பெருக இடரானதும் தொலைய
அருள் ஞான இன்பமது — புரிவாயே
நவநீதமும் திருடி உரலோடே ஒன்றும் அரி
ரகுராமர் சிந்தை மகிழ் — மருகோனே
நவலோகமும் கை தொழு நிசதேவ அலங்கிருத,
நவமான விஞ்சை கரு — விநோ கோவே

சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்களையும் மூன்று
கண்களாகக் கொண்ட சிவனுடைய இடது பாகத்தில் உள்ள, நப்பற்ற
பர்வத ராஜனுடைய திருமகள், வடிவம் மேகம் போன்ற திருமாலின்
தங்கை அருளிய குமரனே!
பரம்பொருளான கணபதி, அருகில் மதயானையின் உருவம் கொண்டுவர
உடனிருந்த குறமகள் வள்ளி நீயே அபயமென்று அணையப்பெற்ற
பழநியில் வசிக்கின்ற பெருமானே.

71

(71) சிவபெருமானது மனம் குளிரும்படியாக, பிரணவ மந்திர உபதேசத்தை,
அவரது (இரு) பெருமை பொருந்திய செவியில் சொன்ன குருநாதனே!
ஸ்ரீ பிரணவ மந்திரப் பொருளை (வாய் விட்டுச் சொல்ல வொண்ணாததால்)
சின்முத்திரையால் காட்டியதோடு) இரண்டு செவிகளிலும் அப்பொருள்
நிரம்புமாறு உபதேசித்தருளிய குருநாதனே.
சிவகாமசுந்தரியாம் (பார்வதியின்) மேன்மை பொருந்திய குமாரனே!
கந்தனே! உனக்கு (அடிமை செய்யும்) தொண்டையே விரும்பி உள்ளத்தில்
நினையாமல்
கேடு தரக்கூடிய மாயையிற் பட்டு உலகிலே வீணாக அலைந்து திரியும்
அடியேனை, 'அஞ்சாதே' எனக் கூறியருள நீ வரவேணும்
அறிவு மனத்திற் பெருகி வரவும், இடர்களானவை தொலையவும்,
உனது திருவருளாற் பெறக்கூடிய ஞான இன்பத்தைத் தந்து உதவியருளுக
வெண்ணெயைத் திருடி உரலுடன் கட்டுப்பட்ட ஹரி. ரகுராமராம்
திருமால் உள்ளம் மகிழும் மருகனே!
நவகண்ட பூமியில் உள்ளவர்கள் யாவரும் கைதொழுது வணங்கும் உண்மைத் தெய்வமே!
(இரத்தின மணியணி பொன் மாலைகளால்) அலங்கரிக்கப்பட்டவரே!

தெய்வயானை அம் குறமின் மணவாள சம்ப்ரம் உறு
திறல் வீரம் மிகுசு கதிர் வடிவேலா

திரு ஆவினன்குடியில் வருவேள் சவுந்தரிக
செகமேல் மெய் கண்ட விறல் பெருமாளே

உவஜி (32) 72 ஆதி-4களை (1) $\frac{1}{2}+1+\frac{1}{2}$

சீ உதிரம் எங்கும் ஏய், புழு திரம்பு
மாய மல விண்ட, நோய் கிடு குரம்பை
தீ நரிகள் கங்கு காகம் இவை தின்பது ஒழியாதே
தீது உள குணங்களே பெருகு தொந்த
மாயையில் வளர்ந்த தோல் தசை எலும்பு
சேரிடு நரம்பு தான் இவை பொதிந்து நிலைகாண
ஆயது நமன் கை போக உயிர் அந்த
நாழிகையில் விஞ்ச ஊசிடும் இடும்பை
ஆகிய உடம்பு பேணி நிலையென்று மடவார் பால்
ஆசையை விரும்பியே, விரக சிங்கி
தானும் மிக வந்து மேவிட, மயங்கும்
ஆழ் துயர் விழுந்து மாளும் என அன்பு புரிவாயே (4)

நலம் தருவதான மாய வித்தையால் பிறப்புத் தோற்றங்கள் (பலவற்றைத்) தோற்றுவிக்கும் தலைவனே!

தேவயானை, அழகிய மின்னலைப் போன்ற வள்ளி இவ்விருவருக்கும் மணவாளனே! சம்பிரமம் பொருந்திய அளப்பற்ற ஆற்றலும் வீரமும் மிகுந்துள்ள ஒளி வீசும் கூரிய வேலாயுதத்தை ஏந்தியவனே!

திருஆவினன்குடியில் எழுந்தருளியுள்ள வேளே! இணையற்ற கட்டழகுடையவரே! உலகில் உண்மை ஞானத்தை கண்டுரைத்த திறம் வாய்ந்த பெருமானே.

72

(72) சீழும் ரத்தமும் எங்கும் பொருந்தி, புழுக்கள் நிரம்பிய நிலையில்லாத மலத்தின் பிண்டம், நோய்க்கு இருப்பிடமாம் கூடு ஆகிய இந்த உடம்பைத் தீயும், நரிகளும், கழுகுகளும், காகங்களும் ஆகிய இவை தின்பது நீங்காது

தீமை உள்ள குணங்களே பெருகும் சம்பந்தம் உள்ள மாயையில் வளர்ந்த தோல், சதை, எலும்பு, சேர்ந்துள்ள நரம்பு ஆகிய இவைகள் நிறைந்து நிலை காண முடியாதது (ம் ஆன இந்த உடம்பு)

ஆன இந்த (உடம்பு), யமனது கையில் (உயிர் போக) உயிர் போய்ச் சேர அந்த வேளையில் மிகவும் வருகிப் போகும் துன்பஞ் சேர்ந்த உடம்பு — இந்த உடம்பை விரும்பி அது நிலையானதென்று (கருதி) மாதர்களிடத்தே ஆசையை வைத்து விரும்பி, (மிருகசிங்கிதானும்) காம விஷம் மிக ஏறிச் சேர்வதால் மயக்கங்கொண்டு, ஆழ்ந்த துயரக் கடலில் வீழ்ந்து மாண்டு போகின்ற என் மீது அன்பு வைத்து ஆட்கொள்ளுவீர்

(சிங்கி: குளிர்ந்து கொல்லும் பாஷாணம்)

மாயை வல கஞ்சனுல் விட வெகுண்டு
யார் முழுதும் அண்ட கோளமும் நடுங்க
வாய் பிளிறி நின்று மேக நிகர் தன் கை — அதனாலே
வாரி உற அண்டி வீறொடு முழங்கு
நீரை நுகர்கின்ற கோபமொடு எதிர்ந்த
வாரண இரண்டு கோடு ஒடிய வென்ற — நெடியோனும்
வேயின் இசை கொண்டு, கோநிரை புரந்து
மேயல் புரி செங்கண் மால் மருக, துங்க
வேல, கிரவுஞ்ச மால் வரை இடிந்து — பொடியாக
வேலை விடு கந்த . காவிரி விளங்கு
கார் கலிசை வந்த சேவகன் வணங்க
வீரை நகர் வந்து வாழ் பழநி அண்டர் — பெருமானே (மு)

Contd from pg 21

இருண்ட குவடு இடி பொடி பட வெகு முகடு
எரிந்து மகரம், ஒடிசை கரி குமுறுக
இறந்த அசுரரொடு இப பரி யமபுரம் — விடும் வேலோ

சிரம் பொன் அயனொடு முனிவர்கள் அமரர்கள்
அரம்பை மகளிரொடு அரகர சிவசிவ
செயம்பு என நடமிடு பதம் அழகியர் — குருநாதா
செழும் பவள ஒளி, நகை முக மதி நத
சிறந்த குறமகள் இணைமுலை புதைபட
செயங் கொடு அணை முக சிவமலை மருவிய — பெருமானே

மாயை வல்ல கம்சனால் விடப்பட்டு, கோபமுடன் வந்து, உலகமுழுவதும் அண்ட கோளங்களும் நடுங்கும்படியாய், வாய் பிளிறி வந்து; மேகம் போன்ற கறுத்த தன் துதிக்கையால் (எல்லாவற்றையும்)

வாரும்படியாக நெருங்கி, கர்வத்துடன் முழக்கமிட்டு, நீரை உண்ணும், கோபத்தோடு எதிர்ந்த (குவலயா பீடம்) என்னும் யானையின் இரண்டு கொம்புகள் ஒடிய வென்ற நெடியோனாகிய திருமால்

புல்லாங்குழலின் இசை கொண்டு பசுக்கூட்டங்களைக் காத்து, மேயவிட்ட செங்கண் மாலின் மருகனே! பரிசுத்தமான வேலனே! கிரவுஞ்சம் என்னும் பெரிய மலை (மாயம் வல்ல மலை) இடிந்து பொடியாகும்படி

வேலை எறிய கந்தனே! காவிரியின் பொலிவுள்ள (கார்) நீர் சூழ்ந்த சுவிசை என்னும் ஊரில் வந்த சேவகன் என்னும் அரசன் வணங்க, வீரை நகரில் எழுந்தருளியுள்ள பழநிப் பெருமாளே! தேவர்கள் பெருமானே.

---

contd. from P.22

திருவோங்கி நின்ற கிரௌஞ்ச மலை இடிந்து, பல சிகரங்களும் பொடிபட, மகர மீன்கள் நிறைந்த கடல் தீக்கொள்ள, (அடிமை-நன் திசை) ஒளி பெற்ற திசைகளில் உள்ள (அஷ்ட) கஜங்களும் கலங்கிப் பிளிற, ஆர்ப்பரித்து வந்த அசுரர்களோடு அவர்களின் யானை குதிரைப் படைகளையும் யமலோகத்துக்கு அனுப்பிய வேளே!

பெருமை பொருந்திய பொன்நிறம் கொண்ட பிரமனும், முநிவர்களும், தேவர்களும் அரம்பை மகளிரும் ஹர ஹர சிவ சிவ, சுயம்பு மூர்த்தியே! எனப் புகழத் திரு நடனம் புரியும் அழகிய திருவடியையுடைய சிவபெருமானுடைய குருமூர்த்தியே!

செழித்த பவள ஒளியும், நிலவைப் பழித்துச் சிரிக்கும் சிரித்த முகமும், சிறப்புடன் அமைந்த குறமகளாம் வள்ளியின் இணைமுலைகள் (மார்பில்) அழுந்தும் வண்ணம் வெற்றி கொண்டு அவளை அணைந்த குகனே! சிவமலை மருவிய பெருமாளே

73 (8) (ரு) ஆதி 131

3) ஹம்ஸநாதம்

சீறல் அசடன் வினைகாரன் முறைமையிலி
தீமை புரி கபடி — பவநோயே
தேடு பரிதி கன நீதி நெறி முறைமை
சீர்மை சிறிதும் இலி — எவரோடும்
கூறு மொழியது பொய்யான கொடுமையுள
கோளன் அறிவிலி உன் — அடிபேணக்
கூளன் எனினும் எனை நீ உன் அடியரொடு
கூடும் வகைமை அருள் — புரிவாயே
மாறுபடும் அவுணர் மாள அமர் பொருது
வாகை உள மயிலில் — புனைவோனே
மாகமுகடு அதிர வீசு சிறை மயில்
வாசி என உடைய — முருகோனே
சீறு கவிதை வரு சேவகனது இதய.
மேவும் அரு. பெருமை. — உடையோனே
வீறை உறை குமர, தீர தர, பழநி
வேல, இமையவர்கள் — பெருமானே

---

74) நாட்டக் குறிஞ்சி 74 (35) (ரு) 14/4/40. கண்ட நடை

சுருதிமுடி மோனம் சொல் சிற்பரம ஞான சிவ
சமய வடிவாய் வந்த, அத்வைதம் ஆன, பர
சுடர் சூனியதாய் நின்ற, நிட்கள சொரூப முதல் — ஒரு வாழ்வே

73

(73) சீறிவிழும் சினம் உடைய அசடன், தீவினை புரிபவன், ஒழுக்கம்
இல்லாதவன், தீமை புரியும் வஞ்சகன், பிறவி நோயையே

தேடும் தன்மையுடையவன், பெருமை. நீதி. நெறி. நேர்மை, சிறப்பு
இவை சிறிதேனும் இல்லாதவன், எவரோடும்
பேசும் பேச்சிற் பொய் என்னும் கொடுமையைக் கொண்ட தீயோன், அறி
வில்லாதவன், உன் திருவடியைப் போற்ற விரும்பாத
குப்பை போன்றவன் எனினும், என்னை நீ உன் அடியார் கூட்டத்துடன்
கூட்டி வைக்கும்படியான வழியைத் தந்து அருள்புரிவாயாக
எதிர்த்து (விரோதித்து) வரும் அசுரர்கள் மாளும்படி போர் செய்து வெற்றிக்
கிரீடம் அணிந்தவனே!
ஆகாயத்தின் உச்சி (அண்ட முகடு) அதிரும்படி வீசும் சிறகுகளைக் கொண்ட
மயிலைக் குதிரையாக உடைய முருகனே
பெருமை மிக்க கலிசை என்ற ஊரில் வாழ்ந்த சேவகனது உள்ளத்தில் வீற்றி
ருக்கும் ஒப்பற்ற பெருமையை உடையவனே!
வீரை என்னும் தலத்தில் வீற்றிருக்கும் குமரனே! தீரம் கொண்டவனே!
பழநி வேலவனே! தேவர்கள் பெருமானே.

74

(74)
வேத முடிவாய், மோன நிலையைக் காட்டுகின்ற அறிவு மயமாம்
பரம ஞான சிவமய வடிவாய் விளங்கி எழுந்தருளும் - இரண்டற்ற
(எல்லாவற்றிலும் கலந்திருக்கின்ற) பரஞ்சுடர் ஒளியாய் நிற்கின்ற
களங்கமில்லாத சொரூபமுள்ள, முதன்மையான ஒப்பற்ற வாழ்வே!

துரிய நிலையே கண்ட முத்தர் இதய அ கமலம்
அதனில் விளையா நின்ற அற்புத சுபோத சுக
சுயபடிகமாம் இன்ப பத்ம பதம் (ஏ) அடைய — உணராதே

கருவில் உருவே தங்கு சுக்கில நிதான வளி
பொரும அதிலே கொண்ட முக்குண விபாக நிலை
கருத அரிய வஞ்சகக் கபடம் மூடு உடல் — வினை தானே

கலகம் இடவே பொங்கு குப்பை மல வாழ்வு நிஜம்
என உழலும் மாயம் செனித்த குகையே உறுதி
கருத அசுழம் ஆம் இந்த மட்டைதனை ஆள் உனது — அருள்தாராய்

ஒரு நியமமே விண்ட சட் சமய, வேத, அடி
முடி நடுவுமாய், அண்ட முட்டை வெளி ஆகி, உயிர்
உடல் உணர்வு அதுஆய், எங்கும் உற்பனம் அது ஆக அமர் — உளவோனே

உததரிசமாம் இன்ப புஞ்ஜ அமிர்த போக சுகம்
உதவும் அமல ஆனந்த, சத்திகர, மெய் உணர் அ
வுரு பிரணவா மந்த்ரம் கர்த்தவியம் ஆக வரு — குருநாதா

தன்மயமாய் நிற்கும் உயர்ந்த யோக நிலையைக் கண்ட முத்திக்கு உரிய பெரியோரது உள்ளத் தாமரையில் உண்டாகின்ற அற்புதமான மெய்ஞ் ஞான சுகமதாய், சுயஞ் சோதியாய், ஸ்படிகம் போல (மாசற்ற) பேரின்ப நிலையாயுள்ள (உனது) தாமரை திருவடிகளைச் சேர அறியாது

கருவில் உருவாகத் தங்கியுள்ள சுக்கிலத்தொடு (நிதான வளி) உயிர்ச் சார்புடைய (பிராண) வாயு வந்து பூரிக்க - அத்தகைய சேர்க்கையால் வந்த (சத்துவ, ராஜஸ, தாமஸ) மூன்று குணங்களின் வேறுபட்ட நிலையும், எண்ணுதற்கு அரிதான வஞ்சகமும், சூதும். மூடி, உடலில் விளைவுகள்

கலகப் போர் செய்ய, மேலெழுந்து வரும் குப்பைக்குச் சமமான மாசு உள்ள இவ்வாழ்வை மெய்யென்று எண்ணி திரிபவனும், மாயத்தின் பிறப்பிடமாம் குகை போன்ற இவ்வுடல் நிலையுள்ளதென்று எண்ணுகின்ற நாயுமாகிய இந்த மூடனை ஆண்டருள நீ அருள்புரிவாயாக!

ஒப்பற்ற விதிமுறைகளை வெளியிடுகின்ற ஆறு சமயங்களுக்கும், வேதங்களுக்கும் முதலும், முடிவும், நடுவுமாகி, உருண்டை வடிவாயுள்ள அண்டங்களாகவும் அதற்கப்பாலுள்ள பெருவெளியாகவுமாகி, ஆன்மாக்களின் உயிர், உடல், உணர்வாகவுமாகி, எங்கும் (நீக்கமற நிறைந்து) தோன்றுபவருமாய் உள்ள நித்தியப் பொருளே!

ஜலத் தோற்றம் (தண்ணீர் ஊற்றெடுப்பது) போல மாறாத இன்பத்தை நல்கும் புதிய அமிர்தத்தையொத்த சிவ போக சுகத்தைத் தருகின்ற, மாசற்ற ஆனந்த வடிவமானவனே! சக்தி வேலாயுதத்தைக் கையில் ஏந்தியவனே! பொருந்திய அறிவுருவமாகிய அந்தப் பிரணவ மந்திரத்துக்குத் தலைமைப் பொருளாக எழுந்தருளியுள்ள குருநாதனே!

பருதி கதிரே கொத்து நற் சரண நூபுரம்

அது அசைய, நிறை பேர் அண்டம் ஆக்க, நடமாடு, கன

பத, கெருவிதா துங்க வெற்றிமயில் ஏறும் ஒரு திறலோனே

பணியும் அடியார் சிந்தை மெய்ப் பொருள் அது ஆக நவில்

சரவணபவா ஒன்று வல்கமும் ஆகி வளர்

பழநிமலைமேல் நின்ற சுப்ரமணியா அமரர் பெருமானே

(75) பிலஹரி 75 (5½) (–) 1+½+½+½

ஞானங்கள் பொறிகள் கூடி வான் இந்து கதிர் இலாத

நாடு அண்டி நமசிவாய வரையேறி

நா இன்பரசம் அது அன ஆநந்த அருவிபாய

நாதங்களொடு குலாவி விளையாடி

ஊனங்கள் உயிர்கள் மோக, நான் என்பது அறிவிலாமல்,

ஓம் அங்கி உருவம் ஆகி, இருவோரும்

* தச நாதங்கள். கிண்கிணி, சிலம்பு, மணி, சங்கம், யாழ், தாளம்

வேய்ங்குழல், பேரி, மத்தளம், முகில்

சூரியப் பிரகாசத்தை இனிது வெளிப்படுத்தும், நன்மையைத் தரும் திருவடிகளின் தண்டைகள் அசைய, நிறைந்த பெரிய அண்டங்கள் எல்லாம் ஒருங்கு அசைய, நடனம் செய்கின்ற பெருமை தங்கிய திருவடிகளை உடையவனே! செருக்கும், உயர்ச்சியும், ஜெயமும் கொண்டுள்ள மயிலேறும் ஒப்பற்ற ஆற்றல் உடையவனே!

பணிகின்ற அடியார் தமது உள்ளத்தில் மெய்ப்பொருளாகக் கருதிப் போற்றி செய்யும் சரவணபவா என்னும் ஆறெழுத்துக்கள் பொருந்திய வலிய பேரொளியாகி வளர்கின்ற பழநிமேல் வீற்றிருக்கின்ற சுப்பிரமணியனே! தேவர்கள் பெருமானே!

(பழநி மலை சுபாசுர மலையாம்)

76

(75) ஞான நிலையை (மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும்) பொறிகள் (இந்திரியங்கள்) கூடப்பெற்று - ஐம்புலன்களும் ஞான நிலையை நாடி நிற்பதாய் - வானில் உள்ள சந்திர சூரியர்கள் இல்லாத தேஜோ மண்டல பூமியை அடைந்து (உள்ளொளியாகிய ஸ்ரீநந்தி ஒளியைக் காணப் பெற்ற 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்தை ஓதுவதால் அடையக் கூடிய உச்சி நிலையை அடைந்து

நாவுக்கு இன்ப ரசத்தைத் தரும் ஆனந்தம் என்னும் அருவி (உட்புறத்தே) பாய, அப்போது தச பிரம நாதங்களும் கேட்க மகிழ்ந்து விளையாடி

ஊன் உயிர் ஆசைகளும், நான் என்ற தன்மையும் அற்று (என்னை விட்டு விலக) (ஜீவபோதமற்ற நிலையில் நின்று) பிரணவ ஜோதி வடிவாகி, [சிவோஹ நிலை கொண்டவனாய், சிவனே நான் என்று பாவிக்கும் நிலை பெற்றவனாய்] ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஆகிய நாம் இருவரும்

ஞா அந்தம் மருவி, ஞான மா விஞ்சை முதுகின் ஏறி
லோகங்கள் வலமது ஆட அருள் தாராய்

தேன் அம் கொள் இதழி தாகி தார் இந்து சலில வேணி
சீர் அங்கன் எனது தாதை ஒரு மாது

சேர் பஞ்ச வடிவி, மோகி, யோகம் கொள் மவுன ஜோதி
சேர் பங்கின் அமலன் நாதன் அருள் பாலா

கானங்கள் வரைகள் தீவு நதங்கள் பொடிய, நீல
காடு அந்த மயிலில் ஏறும் முருகோனே
காமன் கை மலர்கள் நாண வேடம் பெண் அமளி சேர்வை
காண் எங்கள் பழநி மேவும் பெருமாளே

பஞ்ச வடிவி : அம்பிகை பஞ்ச வர்ணங்களை உடையவள்
பிங்கலை : பொன்னிறம் ... கௌரி
நீலி : நீல நிறம் ... காளி
செய்யாள் : செந்நிறம் ... திருமகள்
வெளியாள் : வெண்ணிறம் ... கலைமகள்
பசும் பொன் : பச்சை நிறம் ... உமை

ஒன்று சேரும் முடிவை அடைந்து (ஒரு வடிவமாகி அத்துவித மாகக் கலந்து) மெய்ஞ் ஞானக் கலையாகிய புரவியின் முதுகின் ஊர்ந்து உலகமுழுவதும் வலமாக பவனி வரும் பெருவாழ்வை — அற்புத மவுன நிற்குண நிலையைப் பெற்று, சகல லோகங்களும், அந்த ஞான ஒளியிற் சுற்றி விளக்கந் தந்து பொலிவு தர — அருள் புரிவாயாக.

தேன் நிறைந்த கொன்றை மாலை, (தாகி - தாதகி) ஆத்தி மாலை, தார மாலை, சந்திரன், (கங்கை) நீர் இவைகளைக் கொண்ட (வேணி) சடைமுடியை யுடைய சிறந்த அருள் திருமேனியையுடையவரும், என் தந்தையும், ஒப்பற்ற மாது சேர்ந்துள்ள ஐந்து வடிவத்தினள், சிவத்தின் மீது காதலுடையவள், யோக நிலை பூண்ட மவுன ஜோதி - (ஆகிய பார்வதி தேவி) சேர்ந்துள்ள இடது பாகத்தை உடைய குற்றமற்ற நாதனுமான சிவபெருமான் அருளிய பாலனே!

காடுகள், மலைகள், தீவுகள், கடல்கள் பொடிபட, நீல நிறத்தை யுடையதும் வனத்தில் உலாவுவதும், அழகியதுமாகிய மயிலில் ஏறும் குருகோனே!

மன்மதனுடைய கைம்மலர்ப் பாண, [illegible], வேடப் பெண் வள்ளியின் படுக்கைச் சேர்க்கையைக் கண்ட எங்கள் பழநி மேவும் பெருமானே.

(76) பூர்வி கல்யாணி

தகர நறுமலர் பொதுளிய குழலியர்
கலக கெருவித விழிவலைபட, விதி
தலையில் எழுதியும் அனவயின் உறவிடு — அதனாலே
தனயர், அனை, தமர், மனைவியர், சிநேகிதர்
சுரபி விரவிய வகையென நினைவுறு
தவன சலதியின் முழுகியெ கிடந்து படு — துயர்தீர
அகரமுதலுள பொருளினை அருளிட
இருகை குவி செய்து உள் உருகிட உருகியெ
அரகர என வலம் இடமுற எழில் உனது — திருபாதம்
அருள அருளுடன் மருள் அற இருள் அற
திரண அயில் கொடு குருகணி கொடியொடு
அழகு பெற மரகத மயில் மிசை வர — இசைவாயே (மு)
திகர இடையினின் நிரை வர இசை தெரி
சதுரன், விதுரன் இல் வருபவன், அனையது
திருடி அடிபடு சிறியவன் நெடியவன் — மதுசூதன்
திகிரி வளை கதை வசி தநு உடையவன்
எழிலி வடிவனன் அரவு பொனமுடி மிசை
திமித திமி திமி என நடமிடும் அரி — மருகோனே
பகர புகர்முக மதகரி, உழை தரு
வனிதை வெருவ முன் வர அருள் புரி குக
பரம குருபர இமகிரி தரு மயில் — புதல்வோனே
பலவின் முதுபழம் விழைவு செய்து அழுகிய
நறவு நிறை வயல் கமுகு அடர் பொழில் திகழ்
பழநிமலை வரு புரவல அமரர்கள் — பெருமாளே (ழ)

(76) தகர மரத்தின் மணமுள்ள மலர்கள் நிறைந்த கூந்தலையுடைய பொது
மகளிரின் குழப்பந்தரும், செருக்கு உற்ற கண்வலையிற்பட, விதி தலையில்
எழுதப்பட்டு, இல் வாழ்க்கையில் இருக்க வேண்டு அமைந்த
படியால்

மக்கள், தாய், சுற்றத்தார், மனைவியர், நண்பர், பசு முதலாய பல வகைய
சிந்தனை வர, ஆசைக் கடலில் மூழ்கி இடர் உறுகின்ற துயரம்
நீங்க,

அகர எழுத்தை முதலாகக் கொண்ட பிரணவப் பொருளை நீ உபதேசித்தருளவும்
இரு கைகளையும் குவித்து உள்ளம் உருக உருகி, ஹரஹர எனக்கூறி, உனது
வலமும் இடமும் (இருபுறமும் இருந்து) போற்றுவதால் அழகிய உனது இரண்டு திருவடி
நீ தந்தருளவும், அத்தகைய அருட்பேற்றால், எனது மயக்கமும் அஞ்ஞானமும் நீங்க
ஒளி வீசும் வேலும், கோழிக் கொடியும் விளங்க, அழகாக மரகத மயில்
மீது . . வர இசைந்தருளுவாயே.

கோவர்த்தன கிரியாம் குடையின் கீழ், பசுக் கூட்டம் வந்து சேரக் குழல் ஊதிய
சமர்த்தன்! விதுரன் வீட்டிற்கு உகந்து வந்தவன், வெண்ணெய் திருடி அடிபட்ட சிறி
யவன்; நெடிய உருவைக் கொண்டவன், மது என்னும் அசுரனைக் கொன்றவன்
சக்கரம், சங்கு, கதை, வாள், வில் என்னும் பஞ்சாயுதங்களை உடைய மேக
வடிவினன், பாம்பின் அழகிய முடியின் மீது, திமித திமி திமி என நடனம்
செய்தவன் - ஆகிய திருமாலின் மருகனே!

அழகிய புள்ளியைக் கொண்ட திருமுகத்தையுடைய (மதகரி) கணபதியை
மான் பெற்ற வனிதையாம் வள்ளி அஞ்சும்படி முன்னே வரச் செய்தருளிய குகனே
பரமனே! குருபரனே! இமயமலை தந்த மயிலனைய பார்வதியின் புதல்வனே!

பலாவின் பழுத்த பழத்தினின்றும் கனிந்து ஒழுகிய தேன் நிறைந்த வயல் கரும்
பாக்கு மரங்கள் அடர்ந்த சோலைகளும் விளங்கும் பழநி மலையில் எழுந்த
ருளியுள்ள அரசே! தேவர்கள் பெருமானே!

141

17) ஹமீர் கல்யாணி (12) ஆதி-திஸ்ர நடை

தமரும் அமரும் மனையும் இனிய
தனமும் அரசும் அயலாகத்
தறுகண் மறலி முறுகு கயிறு
தலையை வளைய எறியாதே
கமல விமல மரகத மணி
கனகம் மருவும் இருபாதம்
கருத அருளி எனது தனிமை
கழிய அறிவு தரவேணும்
குமர, சமர முருக, பரம
குலவு பழநி மலையோனே
கொடிய பகடு முடிய முடுகு
குறவர் சிறுமி மணவாளா
அமரர் இடரும் அவுணர் உடலும்
அழிய அமர் செய்து அருள்வோனே
அறமும் நிறமும் அயிலும் மயிலும்
அழகும் உடைய பெருமானே.

---

18) தெத்குருட்டி (35) 78 (v) 14/4/40 - கண்ட நடை

தலைவலி, மருத்தீடு, காமாலை, சோகை, சுரம்,
விழிவலி, வறட், சூலை, காயா சுவாசம், வெகு
கவ,மிகு விஷப்பாக, மாயா விகாரபிணி அணுகாதே

(77) 77

சுற்றத்தாரும், விரும்புகின்ற மானினையும், இனிமை தரும் செல்வமும், அரச பதவியும் (என்னை) விட்டு விலகும்படி

அச்சாமையுடைய யமன் வலிய பாசக்கயிற்றை என் தலையைச் சுற்றி எறியாதவாறு,

தாமரை போன்றதும், சுத்தமானதும், மரகதம் போலவும், மணிபோலவும், பொன் போலவும் அருமை வாய்ந்த (உனது) இரண்டு திருவடிகளைத்

தியானிக்கும் கருத்தை எனக்கு அருளி, என்னுடைய திக்கற்ற நிலை நீங்கும் வண்ணம் அறிவைத் (ஞானத்தை) தந்தருள வேண்டும்

குமரனே, போர் வல்ல முருகனே! பெரிய பொருளே! விளங்குகின்ற பழநி மலையில் இருப்பவனே!

கொடிய மதயானையை முடுகி எதிர் வரும்படி செய்த குறச் சிறுமி வள்ளியின் மணவாளனே

தேவர்களுடைய துன்பமும், அசுரர்களுடை— உடலும் அழியும்படி போர் செய்து அருளியவனே!

அற நெறியும், தனியும், வேலும், மயிலும் அழகும் உடைய பெருமானே.

78

(78) தலைவலி, வசிய மருந்திடுதலால் வரும் நோய், காமாலை, சோகை, சுரம், கண்நோய், வறட்சி, சூலைநோய், சுவாச காசம், அதிகமாக நீர் கோத்தல் கொடிய விஷ நோய்கள், மாயா விகாரத்தால் (காம விகாரத்தால்) வரும் நோய்கள் முதலியவை என்னை அணுகாத படிக்கும்,

தலமிசை அதற்கு ஆன பேரோடு,கூறி. இது
பரிகரி எனக் காது கேளாது போவும் அவர்
சரியும் வயதுக்கு ஏது தாரீர் சொல்லீர் எனவும் விதியாதே

உலைவு அற விருப்பாக நீள் காவின் வாசமலர்
வகை வகை எடுத்தே தொடா மாலிகை ஆபரணம்
உனது அடியினிற் சூடவே நாடும் மாதவர்கள் இருபாதம்

உளமது தரித்தே விறலோடு பாடி, அருள்
வழிபட, எனக்கே தயாவோடு நாள் உதவ
உரகம் அது எடுத்து ஆடும் மேகார மீதின் மிசை வரவேணும்

அலை கடல் அடைத்தே மகா கோர ராவணனை
மணிமுடி துணித்து ஆவியே ஆன ஜானகியை
அடவுடன் அழைத்தே கொள் மாயோனை மாமன் எனும் மருகோனே
அறுதினை முடித்தோனை ஆதாரமானவனை
மழு உழை பிடித்தோனை மாகாளி நாணமுனம்
அவைதனில் நடித்தோனை மா தாதையே எனவும் வருவோனே

இப்பூமியில், அதற்கான பேர்களான வைத்தியர்களிடம் போய், (நோய் வேதனைகளைக்) கூறி, (இது பரிகரி) இந்நோய்களை நீக்குவீர் என்று சொன்னால், அவர்கள் காது கேட்காதது போல் இருந்து, "தளர்ந்து கொண்டே வரும் வயதை (உடலை) பலப்படுத்துவதற்கு என்ன பொருள் கொடுப்பீர் சொல்லுங்கள்" என்று சொல்லவும். விதியாதே (அந்த மாதிரி அலையுமாறு) விதியாமல்

ஊக்கக்குறைவு இன்றி (ஊக்கத்துடனும்) அன்புடனும், பெரிய நந்த வனத்தில் உள்ள மணமுள்ள மலர்களை, வகை வகையாக எடுத்துத் தொடுத்து மாலை வகைகளில் ஆபரணங்கள் போல அமைத்து உனது திருவடிகளிற் சூடுவதற்கே மனம் நாடுகின்ற சிறந்த தவ சிரேஷ்டர்களுடைய இரண்டு பாதங்களையும்

உள்ளத்தில் தரித்தே, ஆய்ந்த அறிவுடன் [அல்லது வினவுதலோடு- உன் கருணை என்று எனக்குக் கிடைக்கும்? உன்னையடையுநாள் என்றோ?] துதித்துப்பாடி, (உனது) திருவருளால் (உன்னை) வழிபடுவதற்கு, என் மீது அன்பு கூர்ந்து (உனது) திருவடியைத் தந்தருள, பாம்பை எடுத்து உதறி ஆடும் மயில் மீது வந்தருள வேணும்

அலைகடலை அடைத்து மகாகோரமான ராவணனுடைய மணிமுடிகளை அறுத்துத் தள்ளி, உயிருக்கு ஒப்பான சீதாபிராட்டியைத் தனது (புய) வலிமையால் அழைத்துக் கொண்ட மாயவனை மாமன் என்றழைக்கும் மருகனே

அறுகம் புல்லை முடித்தவனும், உயிர்களுக்கெல்லாம் ஆதாரமானவனும் மழு, மான் இவைகளை ஏந்தியவனும், மஹா காளி வெட்கப்படும்படி முன்பு சபையில் திருநடனம் புரிந்தவனும் ஆகிய சிவபெருமானைச் 'சிறப்புற்ற தந்தையே' என்றழைக்க வந்தவனே!

பல கலை படித்து ஓது பாவாணர் நாவில் உறை
கிருசரண வித்தார வேலாயுதா உயர் செய்
பாண் மிசை குறப்பாவை தோள் மேவ மோகம் உறு மணவாளா

பதும வயலிற் பூக மீதே வராய்கள் துயில்
வரு புனல் பெருக்கு ஆறு காவேரி சூழ வளர்
பழநி வரு கற்பூர கோலாகல அமரர் பெருமானே.

பந்து வராளி (2½) 79 (ம) 1+½

திடம் இலி, சற்குணம் இலி, நல் திறம் இலி, அற் புதமான
செயல் இலி, மெய்த்தவம் இலி, நற் செபம் இலி, சொர்க் கமு மீதே

இடம் இலி, கைக் கொடை யிலி, சொற்கு இயல்பு இலி, நற் தமிழ் பாட

இருபதம் உற்று இருவினை அற்று இயல் கதியைப் பெற வேணும்

கெடுமதி உற்றிடும் அசுரக் கிளை மடியப் பொரும் வேலா

கிரண குறைப் பிறை அறுகு அக்கு இதழ் மலர் கொக்கு இறகோடே

படர் சடையிற் புனை நடனப் பரமர் தமக்கு ஒரு பாலா
பல வயலிற் தரள நிறைப் பழநி மலைப் பெருமானே

பலகலைகளைப் படித்து ஓதும் கவிகளுடைய நாவில் உறைகின்ற இரண்டு திருவடிகளை உடைய விசாலமான புலமையையுடையவரே! வேலாயுதரே! உயரமாகச் செய்யப்பட்ட பரண் மீதிருந்த குறப்பெண் (வள்ளியின்) தோளைச் சேர்வதற்கு ஆசை கொண்ட மணவாளனே!

தாமரை மலர்கின்ற வயலிலும், (பூக) பாக்கு மரங்கள் மீதும் வரால் மீன்கள் துயிலும்படி வருகின்ற நீர்ப்பெருக்கை உடைய அருகிய காவிரி சூழ விளங்கும் பழநியில் எழுந்தருளியுள்ள கற்பூர தீபங்களின் கோலாகலத்தை உடையவரே! அமரர் பெருமானே.

79

(79) (பக்தி நெறியில்) திடமில்லாதவன், உத்தம குணம் இல்லாதவன், நல்ல தொண்டுகள் செய்ய ஆற்றலில்லாதவன், அற்புதமான (வியக்கப்படுகின்ற) செயல் ஒன்றுமில்லாதவன். மெய்யறிவோடு கூடிய தவத்தை செய்யாதவன் திருந்திய செபம் செய்தல் இல்லாதவன்_ சுவர்க்க லோகத்திலும் இடம் பெறத் தகுதியற்றவன். கையால் கொடுத்தல் அறியாதவன், நல்ல தமிழ்ப் பாமாலைகள் பாடித்துதிப்பதற்கு சொல் வன்மை இல்லாதவன் (இத்தகைய ஒரு குணமுமில்லாத நான்) உனது இரண்டு சரணாரவிந்தங்களை அடைந்து, இருவினைகளும் அற்று, தகுதியுள்ள நல்ல கதியைப் பெறவேணும்

கெட்ட புத்தியைக் கொண்டுள்ள அசுரர் கூட்டங்கள் இறந்து போம்படி போர்செய்த வேலனே!

ஒளிகள் குறைந்துள்ள இளம் பிறையையும், அறுகம் புல்லையும், ருத்ராக்ஷ மாலையும். கொன்றை மலரையும். கொக்கின் இறகினுடனே படர்ந்த சடையிற் புனைந்துள்ள, நடனம் செய்கின்ற பரமருடைய ஒப்பற்ற பாலனே

பலன் தரும் வயல்களில் முத்துக்கள் நிறைந்துள்ள பழநி மலையின் மீது எழுந்தருளியுள்ள பெருமானே

(80) பைரவி (3) (-)/3

திமிர உததி அனைய நரக
ஜெனனம் அதில் விடுவாயேல்
செவிடு குருடு வடிவு குறைவு
சிறிது மிடியும் அணுகாதே
அமரர் வடிவும் அதிக குலமும்
அறிவு நிறையும் வரவே, நின்
அருள் அது அருளி எனையும் மனதொடு
அடிமை கொளவும் வரவேணும்
சமர முக வெல் அசுரர் தமது
தலைகள் உருள மிகவே நீள்
சலதி அலற நெடிய பதலை
தகர, அயிலை விடுவோனே
வெம் அரவு அணையில் இனிது துயிலும்
விழிகள் நளினன் மருகோனே
மிடறு கரியர் குமர, பழநி
விரவும் அமரர் பெருமானே

---

(81) வசந்தா (6½) 81 (v) 3+½+2

பகர்தற்கு அரிது ஆன செந்தமிழ் இசையிற் சில பாடல் அன்பொடு
பயிலப் பல காவியங்களை உணராதே
பவனத்திரை விழியின் கணி அதனைப் பொருவாய் மடந்தையர்
பசலைத் தனமே பெறும்படி விரகாலே

(80) திரண்ட கடல் போன்றதும், நரகத்துக்கு 3ப்பானதும் ஆன பிறப்பு என்பதில் நீ (என்னை) விழும்படி செய்தால்

செவிடு, குருடு, அங்கக் குறைவு, சிறிதேனும் வறுமை என்பது என்னை அணுகாதபடியும்

தேவர்களை யொத்த சிறந்த வடிவும், உயர்ந்த குடிப்பிறப்பும், அறிவும் நீதி ஒழுக்கமும் எனக்கு வருமாறு, உனது

திருவருளைப் பாலித்து, என்னையும் என்னுடைய மனத்தையும், உனது வசமாக்கித் தந்தே தாட்கொண்டு அடிமை கொள்ள வந்தருள வேணும்

போர்முகத்தில் வெல்லப்பட்ட அசுரர்களின் தலைகள் உருள மிகவும் பெரிய

கடல் அலறவும், நீண்ட (கிரௌஞ்ச) மலை பொடியாகும்படி வேலைச் செலுத்தியவனே!

வெப்பத்தைத் தரும் பாம்பணையில் இனிமையாகக் கண் வளரும், தாமரை யொத்த கண்களையுடைய திருமாலின் மருகனே!

கண்டங் கரியராயுள்ள சிவபெருமானின் குமரனே! பழநியில் எழுந்தருளியுள்ள, தேவர் தம் பெருமானே.

81

(81) சொல்லுதற்கு அருமையான செந்தமிழ் இசையிலே சில பாடல்களை அன்புடன் பயிலுவதற்கு வேண்டிய பற்பல தமிழ்க் காப்பியங்களை படித்து உணராமல்

பவளத்தையும் வீழிப் பழத்தையும் நிகர்க்கும் வாயையுடைய மாதர்களின் தேமல் படர்ந்த தனத்தைப் பெறவிரும்பி ஊக்கத்துடனே

சகரக் கடல் சூழும் அம்புவி மிசை இப்படியே திரிந்து உழல்
சருகு ஏத்து உனமே அயர்ந்து உடல் மெலியாமுன்

தகதித்திமி தாகிணங்கிண என உற்று எழு தோகை அம்பரி
தனில் அற்புதமாக வந்து அருள் புரிவாயே

நுகர் வித்தகம் ஆகும் என்று உமை மொழியில் பொழி பாலை உண்டிடு
நுவல் மெய்ப்பு உள பாலன் என்றிடும் இளையோனே

நுதி வைத்த கரா மலைத்திடு களிறுக்கு அருளே புரிந்திட
நொடியில் பரிவாக வந்தவன் மருகோனே

அகரப்பொருள் ஆதி நன்றிடு முதல் அக்கரம் ஆனதின் பொருள்
அரனுக்கு இனிதா மொழிந்திடு குருநாதா

அமரர்க்கு இறையே வணங்கிய பழநித் திருவாவினன் குடி
அதனில் முடியாய் இருந்து அருள் பெருமாளே.

) ஹுசேனி 82 (8½) (-) ($1\frac{1}{2}+2+1\frac{1}{2}+1+1\frac{1}{2}+1$)

பஞ்ச பாதகன், பாவி, முழு மூடன் வெகு
வஞ்ச லோபியன், சூது, கொலைகாரன், மதி
பண் கொளாதவன், பாவ கடல் ஊடு நுழை, மயல் ஆசை

சகர புத்திரர்களால் ஏற்பட்ட கடல் சூழ்ந்த அழகிய இப்பூமியில் இவ்வாறு நான் திரிந்து, அலைந்து, சருகு போன்று உள்ளம் சோர்வுற்று உடல் மெலிவதற்கு முன்னே.

தகதித்திமி தாகிணங்கிண என்ற தாள ஜதியுடன் நடனம் செய்து எழுகின்ற, தோகையை யுடைய அழகிய குதிரையாம் மயில் மீது அற்புதமாக எழுந்தருளி வந்து அருள் புரிவாயே!

"உண்டுக" இது ஞானத்தைத் தரும் என்று உமையம்மை மொழிந்து (பொற் கிண்ணத்தில்) பொழிந்து தந்த பாலை உண்டவனும், (வேதாகமங்களாலும், ஞானிகளாலும்) சொல்லப்படும். மெய்ப்பு (வாய்மை, புகழ்ச்சி) நிறைந்தவனுமான பாலன் என்று பாராட்டப்படும் இளையோனே

நுனிக் கூர்மை கொண்ட (வாயை உடைய) ஆண் முதலை பலித்துப் போயிட யானைக்கு (கஜேந்திரனுக்கு) அருள் புரியும் பொருட்டு ஒரு நொடிப் பொழுதில் அன்புடனே வந்த திருமாலின் மருகனே!

அகர. உகர. மகராதிகள் அடங்கிய முதலெழுத்தாம் (ஓம் என்னும்) பிரணவத்தின் பொருளைச் சிவபெருமானுக்கு இனிமையாக உபதேசித்த குருநாதனே!

தேவர்களுக்குத் தலைவனும் இந்திரன் வணங்கிப் பூசித்த, பழநித் திருவாவினன்குடியிற் குடியாக வீற்றிருந்து அருளும் பெருமானே.

82

(82) பஞ்ச பாதகங்களும் செய்தவன், பாவி. முழுமூடன், மிக்க வஞ்சனையுடன் கூடிய உலோபி, சூது, கொலை ; இவை செய்பவன், அறிவில் நல்ல பண்பையே கொள்ளாதவன், பாவமாகிய கடலுள் நுழைகின்ற செருக்கிலும், ஆசையிலும்

51

பங்கன், மோதி அம் பாந் நரகில் வீணின் விழ
பெண்டிர் வீடு பொன் தேடி நொடி மீதில் மறை
பஞ்ச மா மலம் பாசமொடு கூடி வெகு சதிகாரர்

அஞ்சு பூதம் உண்ட அ கடிய காரர் இவர்
தங்கள் வாணிபம் காரியம் அலாமல், அருள்
அன்பர் பாலுடன் கூடி அறியாத புகழ் அடியேனை

அண்டர், மால், அயன் தேடி அறியாத தனி
சந்த்ர சேகரன், பாவை விளையாடு படிக
அந்த நாடுடன் கூடி விளையாட அருள் புரிவாயே

வஞ்ச மா சுரன் சேனை கடலோடு இவரும்
கவே இணைபோல தளிர் வேலை விடு
வண் கையா, கடம்பு ஒரு தொடை ஆடு முடி குருகோனே

மங்கை, மோக, சிங்கார ரகு ராமரிட
தங்கை, சூலி, அம் காளி, எமை ஈண புகழ்
மங்கள ஆயி, சுந்தர சிவகாமி, உமை அருள் பாலா

கொஞ்சு மா சுகம் போல மொழி. நீல கடை
பெண்கள் நாயகம் தோகை மயில் போல் இரச
கொங்கை மான் குறம் பாவை அவள் கீர வா [illegible]

52

பங்கு கொண்டவன் ஆகிய நான் தாக்குண்டு அந்தப் பாழ் நரகில் வீணாக விழும்படி, பெண்டிர், வீடு, பொன் (பெண், மண், பொன்) என்னும் மூவாசை கொண்டு தேடிய ஆசை ஒரு நொடிப் பொழுதில் மறைகின்றவன் ஐம்பெரு மலங்களுடனும் (ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம்) பாசங்களுடனும் கூடி, மிக்க மோசக்காரராம்

ஐந்து பூதங்களாகிய அந்தப் பொல்லாங்கு செய்பவர்களாகிய அவர்களுடைய வியாபார காரியங்களால் வாமல் (வியாபார காரியங்களிற கலவாமல்) அருள் பெற்ற அன்பர்களிடத்தே கூடி யறியாத புகழையே கொண்டுள்ள அடியேனாகிய நான்

தேவர்களும், திருமாலும், பிரமனும் தேடியும் காணாத ஜோதியாம் சந்திர சேகர மூர்த்தியும், பாவையாம் தேவி பார்வதியும் கூடி விளையாடுகின்ற ஸ்படிகம் போலத் தூவள்ளியமான நாடாகிய சிவலோகத்தில் உள்ளவர்களுடன் கூடி விளையாட அருள்புரிவாயாக.

வசும் நிறைந்த பெரிய சூரனும், அவனது சேனையும், கடலும், கிரௌஞ்சகிரியும் ஒடுங்கவே, சூரியன் போல் ஒளி வீசுகின்ற வேலாயுதத்தைச் செலுத்தின அழகிய கையனே! கடப்ப மலரின் இதழ்கள் விளங்கும் மாலை அசைகின்ற திருமுடியுடன் கூடிய முருகோனே!

மங்கை, வசீகரமும் அழகும் கொண்ட ரகுராமருடைய தங்கை, சூலமேந்தினவள், அழகிய காளி, எம்மை ஈன்ற புகழ் நிறைந்த மங்களகரமான தாய், சந்தான விருக்ஷம் போல் வேண்டியதைத் தருகின்ற சிவகாமி, உமை அருளிய பாலனே!

கொஞ்சுகின்ற அழகிய கிளிபோல மொழியும், கரிய கடைக்கண்ணும், பெண்குலத்திற்கே தலைமையும், தோகை மயில் போலச் சாயலும், இன்பம் நிறைந்த கொங்கையும் பெருமையும் கொண்ட, குறப்பாவையாகிய வள்ளியின்

கொண்டல் சூழும் அம்சோலை மலர் வாவி கயல்
கந்து பாய நின்று அடுதுவர் பாளை உதிர்
கந்தியோடு அகம் சேர் பழநி வாழ் குமர பெருமானே

---

13) <u>பாகேஸ்ரீ</u> 83 (7½) ம (1½+1½+1+1½+2)

பாரி ஆன கொடைக் கொண்டலே, திரு
வாழ் விசாலத் தொடை திண்புயா, எழு
பாரும் ஏறு புகழ் கொண்ட நாயக, அபிராம
பாவலோர்கள் கிளைக்கு என்றும் வாழ்வு அருள்
சீல, நாவல் விளக்கு, இன்ப சீவக,
பாகசாதன, உத்துங்க மானத, என ஓதிச்
சீரது ஆக எடுத்து ஒன்று மா கவி பாடினாலும்
இரக்கம் செயாது உரை
சீறுவார் கடையிற் சென்று தாம் அயர் வுறு வீணே
சேய பாவகையைக் கொண்டு போய், அறி
யாமலே, கமரிற் சிந்துவார் சிலர்,
சேயனார், மனதிற் சிந்தியார், அருகு உறவாமோ (மு)

ஆரு நீர்மை மருக் கண் கரா நெடு
வாயின் நேர்பட உற்று அன்று மூலம் என
ஆரவார மதத் தந்தி தான் உய அருள் மாயன்

மேகங்கள் சூழும் அழகிய சோலைகளும், மலர்கள் நிறைந்த குளங்களும், கயல் மீன்கள் குதிரையின் முழுப்பாய்ச்சல் போலப் பாய்வதால் நின்று அசைகின்ற. துவர்க்கின்ற பாக்குகள் உதிர்கின்ற (கந்தி..) பாக்குமரங்களும், தன்னகத்தே கொண்ட, பழநி மலையில் வாழ்கின்ற குமரனே! பெருமானே.

83

(83) பாரி வள்ளல் போன்ற கொடை மேகமே! இலக்குமி வாசம் செய்யும் பெரிய மாலையைப் புனைந்த திண்ணிய புயங்களை உடையவனே! ஏழு லோகங்களிலும் பரவிய புகழைக் கொண்ட நாயகனே! அழகனே!

பாடவல்ல புலவர் கூட்டத்துக்கு எந்நாளும் நல் வாழ்வைத் தருகின்ற சீலனே! உலகிற்கு விளக்கு போன்றவனே! இன்பம் தரும் ஜீவகனே! (பாகசாதன) இந்திரனே! சிறந்த பரிசுத்த மனிதனே! என்றெல்லாம் கூறி

சிறப்பாக எடுத்தமைத்து நா அருமையான பாடலைப் பாடினாலும் இரங்காமல் கோபித்துப் பேசுபவர்களுடைய கடை வாயிலிற் சென்று. தாம் சோர்வு அடையும்படி வீணாக

செம்மையான பாமாலைகளைப் பாடிக்கொண்டு போய், அறிவில்லாமல் நிலவெடிப்பில் கொட்டுவது போல் கொட்டி இறைத்து வீணாகச் சிந்தி விடுவோர் சிலர் உளர்; (தரும குணத்திற்கு) சேயனார் - தொலைவில் நிற்பவர்களும், (அறநெறியை) மனத்தில் சிந்திக்காதவர்களுமான மக்களுக்கு அருகே சேரலாமோ? (சேரக்கூடாது என்றபடி)

நிறைந்த நீருள்ள கரிய மடுவின் முதலையின் பெரிய வாயில் நேராக அகப்பட்டு அன்று ஆதிமூலமே என்று பேரொலி செய்த மதயானை கஜேந்திரனை பிழைக்கும் வண்ணம் அருளிய மாயவன்

ஆதி நாரணன், நற் சங்க பாணியன்,
ஓதுவார்கள் உளத்து அன்பன், மாதவன்
ஆன நான்முகன் நற் தந்தை, சீதரன், மருகோனே

வீர, சேவக, உத்தண்ட, தேவ குமார
ஆறிரு பொற் செங்கை நாயக
வீசு தோகை மயிற் துங்க வாகனம் உடையோனே
வீறு காவிரி உட்கொண்ட சேகர
ஞான சேவகன் நற் சிந்தை மேவிய
வீரை வாழ் பழநித் துங்க, வானவர் பெருமானே

சாருகேசி 84 (16) ஆதி-2 களை

புடவிக்கு அணி துகில் என வளர் அந்தக்
கடல் எட்டையும் அற குடி முநி, எண்கட்
புநிதச் சததள நிலை கொள் சயம்பு சதுர் வேதன்
புரம் அட்டு எரி எழ விழி கனல் சிந்திக்
கடினத்தொடு சில சிறு நகை கொண்ட அற
புத் கர்த்த அரகர பரசிவன் இந்தத் தனிமுவர்
இட சித்தமும் நிறை தெளிவுறவும், பொற்
செவியுள் பிரணவ ரகசியம், அன்புற
றிட, உற்பன மொழி உரைசெய் குழந்தைக் குருநாதா

முதன்மையான நாராயணன், நல்ல சங்கத்தை ஏந்திய திருக்
கரத்தை உடையவன். துதிப்போரது உள்ளத்தில் வீற்றிருக்கும்
அன்பன், பெரிய தவத்தினையுடைய பிரமனின் தந்தை, இலக்குமியை
மார்பகத்தே கொண்டவன் ஆகிய திருமாலின் மருகனே!

வீரம், பராக்ரமம், உக்கிரம் உள்ள தெய்வத் திருக்குமாரனே!
பன்னிரு அழகிய செங்கை நாயகனே! வீசும் கலாப மயிலாம் பெருமை
வாய்ந்த வாகனத்தை உடையவனே!

பெருமை வாய்ந்த காவிரி நதியைத் தன்னகத்தே கொண்ட தலைவனான கவிச்
சேவகருடைய நல்ல மனதில் வீற்றிருக்கின்ற பெருமானே! விரை
நகரில் வீற்றிருக்கும் பழநியில் வாழும் பரிசுத்தமானவரே! தேவர் பெருமானே.

84

(84) பூமிக்கு அழகிய ஆடை என்று கூறும்படி பரந்துள்ள அந்த எட்டுத்
திக்கிலும் உள்ள கடலை ஒட்டக் குடித்த முநிவராகிய அகத்தியர், எட்டுக்
கண்களை உடையவரும் சுத்தமான நூற்றிதழ்த் தாமரையில்
நிலையாக இருப்பவருமான பிரமனும் நான்கு வேதத்தோன்

முப்புரங்களும் அழிந்து தீப்பிடிக்கும்படி நெற்றிக் கண்ணின் தீயைச்
சிதறி, வன்மையுடன் சிறிது புன்னகை புரிந்த அற்புதத்தலைவரும்,
பாவங்களை நீக்குபவரும், பெரிய மங்கல மூர்த்தியுமாகிய சிவபெரு
மான் - ஆக இந்த ஒப்பற்ற மூவர்

தமது சித்தம் நிறைந்து தெளிவுறும் வண்ணம் அவர்களது அழகிய
செவிகளில் பிரணவ ரகசியப் பொருளை அன்பு கொள்ளும்படி (உனது
திருவாயினின்றும்); உற்பனம்:- தோன்றிய (உபதேச) மொழிகளை
உரைத்த குழந்தைக் குருநாதனே!

எதிர் உற்று அசுரர்கள் படைகொடு சண்டைக்கு
இடம் வைத்திட, அவர் குலமுழுதும் பட்
டிட உக்ரமொடு வெகுளிகள் பொங்கக் கிரியாவும்
பொடிபட்டு உதிரவும் விரிவுறு அண்டச்
சுவர் விட்டு அதிரவும் முகடு கிழிந்து அப்
புறம் அப்பரவெளி கிடுகிடெனும் சத தமும் ஆக
பொருதுக் கையில் உள அயில் நிணம் உண்கக்
குருதிப் புனல் எழு கடலினும் மிஞ்சப்
புரவிக் கண மயில் நட விடும் விந்தைக் குமரேசா
படியிற் பெருமித தகவு உயர் செம்பொற்
கிரியைத் தனி வலம் வர அரன் அந்தப்
பலனைக் கரிமுகன் வசம் அருளும் பொற்பு. அதனாலே
பரன் வெட்கிட உளம் மிகவும் வெகுண்டு அக்
கனியைத் தரவிலையென, அருள் செந்திற்
பழநிச் சிவகிரிதனில் உறை கந்தப் பெருமாளே.

85

(85) பந்துவராளி (8) (v) 1½+4+1½+1)

போதகம் தரு கோவே நமோ நம
நீதி தங்கிய தேவா நமோ நம
பூதலம் தனை ஆள்வாய் நமோ நம பணியாவும்
பூணுகின்ற பிரானே நமோ நம
வேடர் தம் கொடி மாலா நமோ நம
போது அவன் புகழ் சுவாமி நமோ நம அரிதான

எதிர்த்து வந்து அசுரர்கள், நமது படை கொண்டு, சண்டைக்கு
இடம் தந்ததால், அவர்கள் குலம் முழுதும் அழியுமாறு, உக்கிரமாகக்
கோபம் பொங்க, மலைகள் யாவும்

பொடிபட்டு உதிர, விரிந்த அண்டச் சுவர்கள் பிளவு விட்டு அதிர்ந்து
கொள்ள, அண்டத்து உச்சி கிழிபட்டு அதற்கு அப்பாலுள்ள
ஆகாய வெளியெல்லாம் கிடு கிடு என்று சத்தப்படும்படி

சண்டை செய்து, கையில் உள்ள வேல் (பகைவர் தம்) கொழுப்பை
உண்ண, ரத்தநீர் ஏழு கடலினும் அதிகமாகப் (புரண்டு ஓட) குதிரை
யாம் பருத்த மயிலை நடத்திச் செலுத்தின அற்புத குமரேசனே!

பூமியில் மேன்மையும் தகுதியும் மிக்க செம்பொன் மலையாம்
மேருவைத் தனித்து (நீ) வலம் வர, சிவன் அந்தப் பழத்தை,
யானைமுகன் (கணபதி) வசம் தந்த தன்மையாலே

சிவபெருமான் நாணுமாறு, உள்ளத்தில் மிகக் கோபம் கொண்டு
அந்தப் பழத்தை தரவில்லையென்று, அருள் பாலிக்கும் திருச்செந்
தூரிலும் பழநிச் சிவகிரியிலும் (வந்து) வீற்றிருக்கும் கந்தப் பெருமானே

85

(85) ஞானோபதேசத்தைத் தருகின்ற தலைவனே! உன்னை வணங்குகின்றேன்
வணங்குகின்றேன், நீதிக்கு இருப்பிடமாகிய தேவனே நமோ நம,
பூமண்டலத்தை ஆள்பவனே நமோ நம; அநேக அணிகலன்கள்
அனைத்தையும்

அணிகின்ற பெருமானே நமோ நம; வேடர் குலத்தில் அவத
ரித்த கொடிபோன்ற வள்ளியம்மையாரிடம் அன்பு பூண்டவனே நமோ நம
தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பிரமதேவர் துதிக்கின்ற சாமியே
நமோ நம; அருமையான

வேத மந்திர ரூபா நமோ நம
ஞான பண்டித நாதா நமோ நம
வீர கண்டை கொள் தாளா நமோ நம அழகான
மேனி தங்கிய வேளே நமோ நம
வான பைந்தொடி வாழ்வே நமோ நம
வீறு கொண்ட விசாகா நமோ நம அருள்தாராய்

பாதகம் செறி சூராதி மாள்வெ
கூர்மை கொண்ட அயிலாலே பொராடிய
பார அண்டர்கள் வான் நாடு சேர்தர அருள்வோனே
பாதி சந்திரனே சூடும் வேணியர்,
சூல சங்கரனார், கீத நாயகர்,
பார திண்புயமே சேரு சோதியர், கயிலாயர்

ஆதி சங்கரனார் பாக மாது உமை
கோல அம்பிகை மாதா மநோமணி
ஆயி சுந்தரி தாயான நாரணி அபிராமி
ஆவல் கொண்டு விருலே சிராடவே
கோமளம் பல சூழ் கோயில் மீறிய
ஆவினன்குடி வாழ்வான, தேவர்கள் பெருமானே

---

(86) கேதார கௌளை (5½) 86 (-) 1+1½+1½+½

மனக் கவலை ஏதும் இன்றி உனக்கு அடிமையே புரிந்து
வகைக்கும் மநு நூல் விதங்கள் தவறுதே
வகைப்படி மனோரதங்கள் தொகைப்படியினால் இலங்கி
பொருள் நாம

வேத மந்திரங்களின் வடிவு கொண்டவனே நமோ நம;
ஞான பண்டித நாதனே நமோ நம; வீரக்கழல் அணிந்துள்ள
திருவடியை உடையவனே நமோ நம; அழகான
திருமேனியுடையவனே நமோ நம; தேவருலகில் வளர்ந்த
அழகிய தோள்வளை அணிந்த தேவசேனைக்கு நாயகனே நமோ நம;
வெற்றிப் பொலிவு கொண்ட விசாகனே நமோ நம; திருவருளை தந்தருளுக.
பாதகம் நிறைந்த சூரனுதியர் இறந்துபடும்படி கூரிய வேலாயு
தத்தாலே போர் செய்து, பெருமை பொருந்திய தேவர்கள் வானு
லகிற் சேரும்படி அருள் புரிந்தவனே!

பாதி நிலவை அணிந்த சடையினர், சூலப்படை ஏந்திய சங்கரனை
இசைத்தவர், வலிமையும் திண்மையும் கொண்ட புயாசலங்களை
யுடைய ஒளியினர், கயிலாய மலையினர்.

ஆதிசங்கரனர் (எனப்படும் சிவபெருமானது) பாகத்தில் விளங்கும் மாது
உமையம்மை, அழகிய அம்பிகை, மாதா, மனோன்மணி, ஆயி, சுந்தரி, ...
உயிர்கட்கு தாயான நாரணி, அழகி (ஆகிய பார்வதி தேவி)

அன்பு கொண்டு பெருமையுடனே (உன்னைச்) சீராட்ட, அழகு பல
கொண்ட திருக்கோயில் சிறந்து விளங்கும் திருவாவினன் குடியில்
வாழ்வு கொண்டிருக்கும், தேவர்கள் பெருமானே..

86

(86) மனக்கவலை சிறிதேனும் இல்லாமல், உனக்கு அடிமை செய்யும்
பணியையே பூண்டு, வகையாய் அமைந்துள்ள (அறநூல்) நீதி
நூல் முறைகளில் தவறாமல்

நல்ல முறையில் மன விருப்பங்கள் (எண்ணிய) கணக்கின்படியே
(கைகூடி வந்து) விளங்கி. ஐயந்திரிபு இல்லாமல் வேதத்தில் சொல்லப்பட்ட

வினைக்கு உரிய பாதகங்கள் துகைத்து, வகையால் நினைந்து,
மிகுத்த பொருள் ஆகமங்கள் முறையாலே

வெகுட்சி தனையே துரந்து களிப்பினுடனே நடந்து
மிகுக்கும் உனையே வணங்க வரவேணும்

மனத்தில் வருவோனே என்று உன் அடைக்கலம் அது ஆக வந்து
மலர்ப் பதம் அதே பணிந்த முநிவோர்கள்

வரர்க்கும் இமையோர்கள் என்பர் தமக்கும் மனமே இரங்கி
மருட்டி வரு சூரை வென்ற முனைவேலா

திணைப்புனம் முனே நடந்து குறக்கொடியையே மணந்து
செகத்தை முழுது ஆள வந்த பெரியோனே

செழித்த வளமே சிறந்த மலர்ப் பொழில்களே நிறைந்த
திருப்பழநி வாழ வந்த பெருமானே

---

(87) வெறுமாக் 87 (7) (ப) 1300

மூலம் கிளர் ஓர் உருவாய், நடு
நுதி நால் அங்குல மேல் நடுவோர் இடை
மூள் பிங்கலை நாடியோடு ஆடிய முதல்வோர்கள்

மூணும் ப்ரகாசம் அது ஆய் ஒரு
சூலம் பெற ஓடிய வாயுவை
மூலந் திகழ் தூண் வழியே அளவிட ஓடி

தீவினைக்குரிய பாதகச் செயல்களை கடிந்து விலக்கி, முறைப்படி தியானித்து, மேலான பொருள்களைக் கொண்ட ஆகமங்களிற் சொன்ன முறையின்படி

கோபம் என்பதை அகற்றி, மகிழ்ச்சியுடன் நடந்து (கடமைகளை செய்து, மேம்பட்டு விளங்கும் உன்னையே (நான்) வணங்குதற்கு (வேண்டிய அருளைத் தர) (நீ) வரவேணும்

(தியானிக்க) மனத்தில் வருபவனே என்று உன்னிடம் அடைக்கலமாக வந்து சேர்ந்து, மலர்ப்பதங்களையே பணிந்த முனிவர்கள் பொருட்டும் சிறந்த சான்றோர் பொருட்டும், தேவர்கள் பொருட்டும், மனம் இரங்கி, யாவரையும் பயமுறுத்தி வந்த சூரனை வென்ற கூரிய வேலனே/ தினைப்புனத்தின் முன் நடந்து சென்று, குறவர் புதல்வியாகிய கொடி போன்ற வள்ளி பிராட்டியை திருமணம் செய்து, உலகம் முழுதும் ஆட்கொள்ளும் பொருட்டு வந்த பெரியோனே/

செழிப்புற்ற வளம் பொலிந்த மலர்ச் சோலைகள் நிறைந்துள்ள திருப்பழநியில் வீற்றிருக்க வந்த பெருமானே!

87

(87) மூலாதாரத்தினின்றும் மேலெழுந்து ஓர் உருவமாகச் சென்று, சரீரத்தின் மத்திய ஸ்தானத்தில் நான்கு அங்குல அளவின் மேல் (நடுவே) சுழுமுனை, இடைகலை, தோன்றும் பிங்கலை எனும் நாடிகளுடன் கலந்து, முதல் வேர்களாகிய

மூன்று நாடிகளும் ஒளிவிட்டு விளங்குவதாகி, ஒப்பற்ற சூலாயுதம் போல விசையாகச் செல்லுகின்ற பிராணவாயுவை, உடம்பிற்கு ஆதாரமாக விளங்கும் முதுகு தண்டின் (சுழுமுனை) வழியாகக் கணக்காக நடச்செய்து

163

பாலம் கிளர் ஆறு சிகாரமொடு
ஆறும் சுடர் அடு பராபர
பாதம் பெற ஞான சதாசிவம் அதின் மேவிப்

பாடும் தொனி நாதமும், நூபுரம்
ஆடும் கழல் ஓசையிலே பரி
வாகும்படியே அடியேனையும் அருள்வாயே (மு)

சூலம், கலை, மான், மழு, சூர் துடி
வேதன் தலையோடும், அரா, விரி
தோடும் குழை சேர் பரனார் தரு முருகோனே

சூரன் கரம், மார், சிலை, வாள், அணி
தோளும், தலை தூள் படவே, அவர்
சூழும் கெட, வேல் விடு சேவக மயில் வீரா

காலின் கழல் ஓசையும் நூபுர
வார் வெண்டைய ஓசையுமே யுக
காலங்களின் ஓசை அது ஆ நடம் இடுவோனே

கானம் கலை மான் மகளார் தமை
நாணம் கெடவே அணை வேள் பிர
காசம் பழனபுரி மேவிய பெருமானே

64

(நெருப்பாறு, மயிர்ப்பாலம் என்கின்ற) நெற்றி (புருவ) மத்தியில் விளங்குகின்ற ஆறாவது ஆதாரமாகிய ஆக்ஞை ஸ்தானத்தில் ஓ கார அக்ஷரத்தோடு பொருந்தி நிறைந்து ஒளி வீசுகின்ற பரம் பொருளின் பாதத்தைப் பெறுதற் பொருட்டு ஞான சதாசிவ நிலையை அடைந்து

(அவ்விடத்தில் கேட்கப்படும்) பாடலொலி நாதத்திலும், சிலம்பொலியுடன் கழலொலியிலும் அன்பு பெருகும்படியாக அடியேனுக்கும் அருள்வாயே!

சூலம், சந்திரன், மான், மழு, ஒப்பற்ற உடுக்கை, பிரமனது கபாலம், பாம்பு, விளங்கும் தோடு, குழை இவை தரித்துக் ~~தரித்து~~ கொண்டிருக்கின்ற சிவபெருமான் தந்த முருகனே!

சூரனது கை, மார்பு, வில், வாள், அழகிய தோள், தலை (இவையாவும் தூள்படவும், (தேவர்களை சிறையிலிருந்து விடுவதில்லை என) அவன் கொண்ட சபதம் பாழாகவும், வேலை ஏவிய பராக்ரம மயில் வீரனே!

காலில் அணிந்துள்ள கழலின் ஒலி, சிலம்பொலி, ஒழுங்கான வீரக் காலணியின் ஒலி - ஆக - இவ்வொலிகளே யுக முடிவைக் காட்டும் ஓசைகளாகத் திகழும்படி நடனம் புரிபவனே!

காட்டில் (வந்த) கலைமான் மகளாகிய வள்ளியை அவளது அஞ்ஞானம் கெட்டொழியுமாறு மருவிய வேளே! ஒளிவீசும் பழநிபுரியில் வீற்றிருக்கும் பெருமாளே.

மூல மந்திரம் ஓதல் இங்கு இலை,
ஈவது இங்கு இலை, நேயம் இங்கு இலை,
மோனம் இங்கு இலை, ஞானம் இங்கு இலை, மடவார்கள்
மோகம் உண்டு, அதிதாகம் உண்டு, அப
சாரம் உண்டு, அபராதம் உண்டு, இடு
மூகன் என்று ஒரு பேரும் உண்டு, அருள் பயிலாத
கோலமும், குண ஈன துன்பர்கள்
வார்மையும் பல ஆகி, வெந்து எழு
கோரகும்பியிலே விழுந்திட நினைவாகி
கூடு கொண்டு உழல்வேனை, அன்பொடு
ஞான நெஞ்சினர் பால் இணங்கிடு
கூர்மை தந்து இனி ஆள வந்து அருள் புரிவாயே
பீலி வெந்து உயர் ஆலி வெந்து, அ
சோக வெந்து அமண் மூகர் நெஞ்சு இடை
பீதி கொண்டிட வாது கொண்டு அருள் எழுது ஏடு

பேணி அங்கு எதிர் ஆறு சென்றிட
மாறனும் பிணி தீர வஞ்சகர்
பீறு வெங்கழு ஏற வென்றிடு முருகோனே

ஆலம் உண்டவர் சோதி அம் கணார்
பாகம் ஒன்றிய வாலை அந்தரி
ஆதி அந்தமும் ஆன சங்கரி குமரேசா

(88) மூலமந்திரமாகிய ஆறெழுத்தை ஜெபிக்கின்றேனில்லை, கொடுத்தல் என்பது இங்கே என்னிடத்தில் கிடையாது. அன்பு என்பதும் இங்கே கிடையாது; (மனத்தை அடக்கும்) மௌன நிலை என்பது இங்கே கிடையாது, ஞானம் என்பது இங்கே கிடையாது. (ஆனால்) மாதர்கள் மீது மோகம் உண்டு, அதனால் மிகுந்த காமவிடாயும் உண்டு; அதனால் செய்த அபசாரம் உண்டு, அதனால் வந்த அபராதம் உண்டு; (எல்லோரும்) இட்ட(மூகன்) கீழ் மகன் என்று ஒரு பேரும் உண்டு; திருவருள் நெறியில் பழகாத வழவும், குணம் இழிவான துன்பச் செயலாளர்களின் கூட்டுறவும் பற்பல தீக்குணங்களை உடையவனாகி, வெந்து எழுகின்ற கோரமான 'கும்பிபாகம்' என்னும் நரகத்திலே விழுவதற்கே நினைவு கொண்டு இந்தக் கூடாகிய உடலைச் சுமந்து கொண்டு திரிகின்ற என் மீது அன்பு வைத்து, ஞான நெஞ்சம் கொண்ட பெரியோர்களுடன் சேரும்படியான நுண்ணறிவைத் தந்து இனி என்னை ஆட்கொள்ள வந்து அருள்புரிவாயே.

மயிற் பீலி வெந்து, உயர்ந்துள்ள குண்டிகை நீரும் வெந்து, அசோகந் தளிர்களும் வெந்து (அந்த அவமானத்தால்) அமணர்கள் ஊமைகளாகி நெஞ்சிலே பயம் கொள்ளுமாறு வாது செய்து, திருவருட் பெருக்கால் (பாசுரம்) எழுதின ஏடு

யாவரும் விரும்பும்படி, அங்கு எதிர் ஏறி (வைகை) ஆற்றிற் செல்லவும், பாண்டியனும் நோய் தீர்ந்து குணம் பெறவும், (சமண) வஞ்சகர்கள் (உடலைக்) கிழிக்கின்ற கொடிய கழுமரத்தில் ஏறவும் வெற்றி கொண்ட முருகனே!

நஞ்சை உண்டவரும், முச்சுடர்களையும் அழகிய முக்கண்களிற் கொண்டவருமான சிவபெருமானது பாகத்தில் பொருந்திய குமரி, பராகாச வடிவி முதலும் ஈறுமாய் நிற்கும் சங்கரியின் குமரனும் ஈசனே!

ஆரணம் பயில் ஞான புங்கவ

சேவல் அம் கொடி ஆன பைங்கர

ஆவினன் குடி வாழ்வு கொண்டு அருள் பெருமானே

---

(89) ரத்சனி 89 (7) (ம) (1½+1+1½+3)

வசன மிக ஏற்றி மறவாதே

மனது துயர் ஆற்றில் உழலாதே

இசைபயில் ஷடாக்ஷர மதாலே

இகபர சௌபாக்கியம் அருள்வாயே

பசுபதி சிவாக்யம் உணர்வோனே

பழநிமலை வீற்று அருளும் வேலா

அசுரர் கிளை வாட்டி, மிக வாழ்

அமரர் சிறை மீட்ட பெருமானே

---

(90) ராமப்ரியா 90 (6½) (ம) (4+1+1½)

வரதா மணி நீ எனா ஓரில்

வருகாது எது தான் அதில் வாராது

இரதாதிகளால் நவலோகம்

இடவே கரியாம் இதில் ஏது

சாதா மறை ஓது அயன் மாலும்

வேதங்கள் போற்றிப் பயில்கின்ற ஞான குருவே! அழகிய
சேவற் கொடியை ஏந்திய திருக்கரத்தனே! திரு ஆவினன்குடியில்
வாழ்வு கொண்டருளும் பெருமானே!

89

(89) உருவேற மிகச் செபித்து- அங்ஙனம் செபித்தலால்
உன்னை மறவாமலிருக்கவும்
மனம் துயரம் தருகின்ற மார்க்கங்களில் திரியாமலிருக்கவும்
சொல்லிச் சொல்லிப் பயில்கின்ற ஆறெழுத்து மந்திரத்தின் அருட்பயனை க
இம்மை மறுமைச் சுகங்களை அடியேனுக்கு அருள்புரிவாயாக
சிவபெருமானது திருமொழிகளான வேத சிவாகமங்களை அறிந்தவனே
பழநிமலையில் வீற்றிருந்து அருளும் வேலனே!
* அசுரர் கூட்டங்களை ஒடுக்கியும், நன்றாக வாழுமாறு
தேவர்களைச் சிறையினின்றும் மீட்டருளிய பெருமானே

90

(90) வரதனே (வரத்தை வழங்குபவரே) கேட்டதைக் கொடுக்கும் சிந்தாமணி
நீ என்று (ஊரில்) ஆராய்ந்துணர்ந்து அன்பு செய்தால்
(எது தான் வராது) எண்ணிய எப்பொருள்தான் கிடைக்காது? அப்படி
முருகன் அருளால் அடையாமல்
* இரசவாதம் முதலியவைகளால் (பாதரசம் முதலியவற்றால் நவலோகங்
களை (பொன், இரும்பு, செம்பு, ஈயம், வெள்ளி, பித்தளை, தரா, துத்தநாதம், வெண்கலம்)
நெருப்பிலிட்டு ஊதுவதனால் எல்லாம் கரியாகவே போய் விடும்,
இதனால் பயன் ஏது (ஒன்றுமில்லை என்றபடி)
சத்திய வடிவினரே! வேதத்தை ஓதுகின்ற பிரமனும், மாலும்
[illegible] நான்கும் அறிந்து கொள்ள மாட்டாத

(91) ஹம்ஸாநந்தி 91 (16) ஆதி-2 களை

வாதம் பித்த மிடா வயிறு ஈளைகள்
சீதம் பல் சனி சூலை மகோதரம்
மாசு அம் கண் பெரு மூல வியாதிகள் குளிர் காசம்
மாறும் கக்கலொடே சில நோய் பிணி
யோடும் தத்துவகாரர் தொணூறு அறுவாரும்
சுற்றினில் வாழ் சதிகாரர்கள் வெகு மோகர்
சூழ் துன் சித்ர கபாயை மூவாசை கொடு
ஏதும் சற்று உணராமலே மாயை செய்
சோரம் பொய்க்குடிலே சுகமாம் என இதின் மேவித்

தாசின் பொற் சரமோடு குலாய், உல
கேழும் பிற்பட ஓடிகெட்டேனே
தூ அம் சுத்த அடியார் அடிசேர நின் அருள்தாராய்

தீதந் தித்திமி தீதக தோதிமி
டூடூண் டுட்டுடுடூடு டூடுடு
சேசெஞ் செக்கண சேகத தீகுட னை பேரி

பரதேவதையாகிய பார்வதி அருளிய குழந்தையே
பழநியம்பதியில் உறைகின்ற பெருமானே.

91

(91) (வாதம்) வாயு நோய்கள், பித்த நோய்கள், பெரிய பானை போன்ற வயிறு கோழையால் வரும் நோய்கள், சீதமல நோய், பல்வலி, சன்னி, சூலை வலி, பெரு வயிற்று நோய், அழகிய கண்களில் உண்டாகும் நோய், பெரிய மூல நோய்கள், குளிர் சுரம், சுவாச-காசம்

அடுத்தடுத்து வரும் வாந்தி முதலிய சில நோய் பிணி வகைகளுடன் 96 தத்துவக் கூட்டத்தாரின் சூழலில் வாழ்கின்ற வஞ்சகர்களும், பேராசைக் காரர்களும் (ஆய ஐம்புல வேடர்களால்)

சூழ்ந்துள்ள பொல்லாத விசித்திரமான (கபாய: கவசம் தேகம்) தேக ஆசையால், மண், பெண், பொன் என்னும் மூவாசையும் கொண்டு எந்த நல்ல பொருளையும் சற்றேனும் உணராமல் மாயையே விளைக்கின்ற கள்ளத்தனமும் பொய்ம்மையுமே கொண்ட இந்த உடலே சுகமெனக் கருதி இவ்வுடலைப் போற்றி விரும்பி

(நல்ல) ஆடை, பொன்னாரம் இவைகளைப் பூண்டு, எழு உலகங்களும் மிற்படுமாறு ஆங்காங்கு ஓடிப் பிறந்து பிறந்து வருகின்ற மூடனாகிய அடியேன், தூய்மை வாய்ந்த அழகிய (பரி) சுத்த அடியார்களின் திருவடியைச் சேரும் பாக்கியத்தைப் பெற உனது திருவருளைத் தந்தருளுக.

'திதிந் திந்திமி தீதக தோதிமி. டேண் டு டுடு டுடுடு டுடுடு செகெகு செக்கண தோதகதீகுட' என்று பேரி வாத்தியம் முழங்கவும்

சேடன் சொக்கிட வேல் கடாகம் எலாம்
அஞ்சு ஊற்றிடவே அசுரர் கிரி
தீவும் பொட்டு எழவே அனல் வேல் விடு — மயில் வீரா

வேதன் பொற்சிரமீது கடாவி நல்
ஈசன் சற்குருவாய் அவர் காதினில்
மேவும் பற்று இலர் பேறு அருள் நீதிய — முருகோனே

வேழம் கட்டி பின் ஏகி மகா வனி
மாவின் பித்துற வாகி வினோ பணி
வீரம் கொட் பழநபுரி மேவிய — பெருமானே

---

(92) வராளி 92 (3½) (ம) ½+2

வேய் இசைந்து எழு தோள்கள் தங்கிய
மாதர் கொங்கையிலே முயங்கிட
வீணிலும் சில பாதகம் செய — அவமே தான்
வீறு கொண்டு உடனே வருந்தியும் (மெ)
உலைந்து அவமே திரிந்து உளா
மேகவன்று அறிவே கலங்கிட — வெகு தூரம்
போய் அலைந்து உழலாகி நொந்து பின்
வாடி நைந்து எனது ஆவி வெம்பியே
பூதலந்தனிலே மயங்கிய — மதி மோகம்

ஆதிசேடன் மயக்கமுறவும், கடல் அண்ட கோளகைகள் யாவும்
அச்சங் கொள்ளவே. அசுரர்கள் வாழ்ந்திருந்த மலைகளும்
தீவுகளும். பொடிபட்டு நாசமுறவும், நெருப்பைக் கொப்புளிக்கும்
வேலைச் செலுத்திய மயில் வீரனே!

பிரமனது அழகிய தலையிற (குடாவி: பிரயோகித்து) குட்டி, நல்ல
சிவபெருமானுக்கு சற்குருவாக அமைந்து, அவர் திருச்செவிகளில்,
நன்மையை நாடுகின்ற பற்றற்றவர் பெறத்தக்க அருளாகிய
பிரணவப் பொருளை உபதேசித்த முருகனே!

(வேடன், செட்டி, வேங்கை மரம், கிழவர் ஆகிய) வேஷங்களைப்
பூண்டு, பின்னர் தினைப்புனத்துக்குச் சென்று, சிறந்த வள்ளி
நாயகியின் மீது அன்பினால் பித்துக்கொண்டு மணந்து, தேவர்கள்
பணிய, வீரம் வாய்ந்து பழநுபுரியில் எழுந்தருளியுள்ள பெருமானே.

92

(92) மூங்கிலுக்கு ஒத்ததாய் எழுந்துள்ள தோள்களைக் கொண்ட
மாதர்களுடைய கொங்கையைத் தழுவ வேண்டி, வினைகச்
சில பாதகச் செயல்களைச் செய்ய, பயனொன்றும் இல்லாமலே

செருக்கு அடைந்து வருந்தி, நிலை குலைந்து, வினைகத் திரிந்து
நெஞ்சம் கவலை கொண்டு, அறிவு கலங்க. வெகுதாரம்

போய் அலைந்து திரிந்து மனம் நொந்து, பின்பு வாடி. நைந்து,
என்னுடைய ஆவி கொதித்து வாட இப்பூமியிலே ஆசை மயக்கம்
கொண்ட புத்தி (என்னை விட்டு) விலகிப் போய்

போது கங்கையின் நீர் சொரிந்து இரு
பாத பங்கயமே வணங்கிடிய
பூசையுஞ் சிவவே புரிந்திட — அருள்வாயே

தீ இசைந்து எழவே இலங்கையில்
ராவணன் சிரமே அரிந்தவர்
சேனையும் செல மாள வென்றவன் — மருகோனே

தேசம் எங்கணுமே புரந்திடு
சூர் மடிந்திட வேலின் வென்றவ,
தேவர் தம்பதி ஆள அன்பு செய் — திருவோனே

அயி சுந்தரி நீலி பிங்கலை
போக அந்தரி சூலி குண்டலி
ஆதி அம்பிகை வேத தந்திரி — இடம் ஆரும்

ஆலம் உண்ட அரனார் இறைஞ்ச ஓர்
போதகந்தனையே உகந்து அருள்
ஆவினன்குடி மீது இலங்கிய — பெருமானே

மலரையும், கங்கை நீரையும் நிரம்பப் பெய்து (உனது) இரண்டு பாத தாமரைகளை வணங்கியே பூஜை சில (நாள்) செய்யும்படி அருள் புரிவாயே

நெருப்புப் பற்றி எழும்படி இலங்கையின் ராவணனுடைய தலைகளை அரிந்து அவனுடைய சேனைகள் தொலைந்து அழிய வென்ற திருமாலின் மருகனே!

அண்டம் எல்லாவற்றையும் ஆண்டு வந்த சூரன் மாள, வேல் கொண்டு வென்றவனே! தேவர்கள் தங்கள் ஊரை ஆளும்படி அன்பு கொண்டவனே!

தாய், அழகி, நீல நிறம் படைத்த காளி, (பிங்கலை) பொன்னிறம் படைத்தவள், யோகத்தை ஊட்டும் பராகாச வடிவினள், திரிசூலத்தைத் தரித்தவள், சுத்த மாயையாம் சக்தி, ஆதி பராசக்தி, வேத நாற்பொருளானவள் ஆகிய பார்வதி தேவி. இடது பாகத்தில் அமரும்

நஞ்சு உண்ட சிவபெருமான் வணங்க ஒரு ஞானோபதேசத்தை மகிழ்ந்து அவருக்கு உபதேசித்தருளிய, திருவாவினன்குடி என்னும் தலத்தில் விளங்குகின்ற பெருமானே